Registered as a news paper.
பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
பக்கங்கள்: பன்னிரண்டு
விலை: ரூபா 7.00

நமது
# ஈழநாடு
தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும்
பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, [illegible] வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆனி 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.அவ்வல் 07 (26.06.2004) சனிக்கிழமை இதழ் :267

# இராணுவத்தினருடனான சந்திப்பை விடுதலைப்புலிகள் ரத்து செய்தனர்!

## கருணா விவகாரத்தால் நெருக்கடிகள் அதிகரிப்பு!

(கொழும்பு)

**விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படும் விவகாரம் வெளிச்சத்துக்கு வந்ததையடுத்து, இராணுத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் இன்று அக்கரைப்பற்றில் நடைபெறவிருந்த சந்திப்பில் தாம் பங்கேற்கப்போவதில்லையென்று விடுதலைப் புலிகள் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு அறிவித்துள்ளனர்.**

இதனால், யுத்த நிறுத்தம் பேணும் நடவடிக்கைகள் மற்றும் சமாதான முயற்சிகளில் பலத்த நெருக்கடிகள் தோன்றியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களைப் பிளவுபடுத்தி மோதல்களைத் தூண்டுவதற்கு கருணாவை அரசாங்கம் பயன்படுத்தியமை நிரூபணமாகியுள்ள நிலையில் இன்றைய சந்திப்பில் தாம் பங்கேற்கப் போவதில்லை என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு புலிகள் அறிவித்துள்ளனர்.

கருணாவுக்கு இராணுவத் தரப்பு உதவிய விவகாரம் பெரும் சர்ச்சைகளாகக் கிளம்பியுள்ள நிலையில், இராணுவத் தரப்புடனான சந்திப்புக்களில் தாம் கலந்துகொள்ளப் போவதில்லை என்று விடுதலைப்புலிகளின் கிழக்குப் பகுதி சிரேஷ்ட தளபதிகளில் ஒருவரான ரமணன் தெரிவித்திருந்தார்.

எனினும் இன்று அக்கரைப்பற்று சந்திப்பு திட்டமிட்டபடி நடை பெறும் என்று போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவை மேற்கோள்காட்டி சில

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கு நிலைமைகள் இயல்பானதாக இல்லை

### கண்காணிப்புக்குழு பிரதிநிதி தகவல்

(கொழும்பு)

கருணாவுக்கு இலங்கை இராணுவத்தினர் உதவி செய்தது தொடர்பாக தகுந்த ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்தார்.

வவுனியா, மன்னார் மாவட்ட நிலைமைகள் தொடர்பாக நேரடியாகக் கண்டறிவதற்காக வவுனியா வந்திருந்த அவரிடம் கருணா சம்பந்தமாக போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் நிலைப்பாடு எவ்வாறு உள்ளதென பி.பி.சி செய்தியாளர் கேட்டபோதே ஹொக்லண்ட் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

போர்நிறுத்தத்தில் சம்பந்தப்பட்டுள்ள இரு தரப்பினரும் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தின் பொது உடன்பாட்டிற்கு ஏற்ப (12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணா விடயத்தில் தலையிட அலிசாகிரிடம் கேட்கவில்லை!

### விடுதலைப் புலிகள் தெரிவிப்பு

(லண்டன்)

கிழக்கை கருணாவின் பிடியிலிருந்து மீட்பதற்கான சண்டையை ஆரம்பித்த பின்னர் - கருணா விவகாரத்தில் தலையீடு செய்யுமாறு அலிசாகீர் மௌலானாவை விடுதலைப் புலிகள் கேட்டுக்கொள்ளவில்லையென்றும், இவ்வாறு அவர் தலையிடுவதை தாம் விரும்பவில்லையென்றும் விடுதலைப் புலிகள் கூறியுள்ளதாக பி.பி.ஸி - தமிழீழ விடுதலைப் புலிகளின் வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்கவே தான் கருணாவை கொழும்புக்கு அழைத்துச் சென்றதாக அலிசாகிர் மௌலானா கூறியிருப்பது தொடர்பாக கருத்து வெளியிட்டபோதே புலிகள் தரப்பிலிருந்து இவ்வாறு கூறப்பட்டது.

மேலும் - அலிசாகிர் மௌலானா கருணாவை பாதுகாப்பாகக் கொழும்புக்கு அழைத்துச் சென்ற மூன்று தினங்களுக்குள் இதனைப் புலிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து அவருடைய செயல் தவறானது எனவும் புலிகளால் கூறப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சமாதான முயற்சிகள் குறித்து விசேட தூதுவர் சொல்ஹெய்ம் தமிழ்ச்செல்வனுடன் பேசுவார்!

(கிளிநொச்சி)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் சமாதான முயற்சிகள் தொடர்பாக எதிர்வரும் புதன்கிழமை - கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் பேச்சுக்களை நடத்தவிருக்கிறார்.

நாளை கொழும்பு வரும் எரிக் சொல்ஹெய்ம், நான்கு நாட்கள் கொழும்பில் தங்கியிருந்து பல்வேறு தரப்பினர்களுடனும் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்துக் கலந்துரையாடுவார்.

நாளை மதியம் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து பேச்சுநடத்தும் எரிக் சொல்ஹெய்ம், சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பது குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அறிந்துகொள்வார்.

இதன்பின்னர் - அரச நிலைப்பாடு குறித்து விடுதலைப் புலிகளுக்கு விளக்கமளிப்பதற்காக எரிக் சொல்ஹெய்ம் எதிர்வரும் புதன்கிழமை கிளிநொச்சி செல்வார்.

சமாதான முயற்சிகளில் தோன்றியிருக்கும் தற்போதைய நெருக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா வளாக மாணவர்களால் துணைவேந்தர் நேற்று சிறைவைப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகக்கு அழைத்துச் சென்ற மூன்று தினங்களுக்குள் இதனைப் புலிகள் கண்டுபிடித்தனர். இதையடுத்து, அவருடைய செயல் தவறானது எனவும் புலிகளால் கூறப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

கொழும்பில் தங்கியிருந்து பல வேறு தரப்பினர்களுடனும் சந்தித்து சமாதான முயற்சிகள் குறித்

## கருணா குடும்பம் வெளிநாடு செல்ல

# உதவியதான குற்றச்சாட்டினை மறுக்கிறார் மிலிந்த மொறகொட

விடுதலைப் புலிகள் இயக்கத்தில் இருந்து நீக்கப்பட்ட கருணாவின் குடும்பத்தினர் வெளிநாடு செல்வதற்கு 'விசா' பெற்றுக் கொடுத்து உதவியதாக, அமைச்சர் மங்கள சமரவீர சுமத்திய குற்றச்சாட்டை ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மிலிந்த மொறகொட மறுத்துள்ளார்.

அமைச்சர் மங்கள சமரவீர தம் மீது சுமத்திய குற்றச்சாட்டு பொறுப்பற்றதும், அடிப்படையற்றதாகும் என்று, மலிந்த மொறகொட விடுத்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கருணாவுக்கோ, அவரின் குடும்பத்துக்கோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் விசா பெற்றுக்கொடுக்க எந்த உதவியையும் நான் செய்யவில்லை என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நாடாளுமன்ற முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் மாநாட்டில், கருணாவின் குடும்பத்தார் விசா பெறுவதற்கு முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட உதவி செய்ததாக அமைச்சர் மங்கள சமரவீர குற்றம் சாட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# புலிகளின் அலுவலகம் மீது மட்டக்களப்பில் கிரனேட் வீச்சு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகம் மீது இனந்தெரியாத நபர்களால் கிரனேட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு பட்டிருப்பில் கோட்ட அரசியற்துறை அலுவலகம் மீதே இத்தாக்குதல் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் இடம்பெற்றபோது - அலுவலகத்தில் ஐந்திற்கும் மேற்பட்ட போராளிகள் தங்கியிருந்ததாகவும், கிரனேட் அலுவலகத்திற்கு வெளியே வீழ்ந்து வெடித்ததில் சேதம் எதுவும் இடம்பெறவில்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு இராணுவக் கட்டுப்பாட்டுப் (12 ஆம் பக்கம் பார்க்க)

# துணைவேந்தர் நேற்று சிறைவைப்பு

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாகத்தின் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துமாறு கோரி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுவரும் மாணவர்களால் துணைவேந்தர் பேராசிரியர் சு.மோகனதாஸ், பீடாதிபதி மகேஸ்வரன் ஆகியோர் நேற்று மாலை முதல் வவுனியா அலுவலகத்தில் சிறைவைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக மாணவர்கள், தமது அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல் உட்பட ஏழு கோரிக்கைகளை முன்வைத்து கடந்த மாதம் 20 ஆம் திகதி மகஜர் ஒன்றை துணைவேந்தருக்கு அனுப்பிவைத்தனர்.

தமது கோரிக்கைகளுக்கு ஒரு மாதமாகியும் தீர்வு காணப்படாததையடுத்து கடந்த செவ்வாய் முதல் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வந்தனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கற்களினால் வீசித் தாக்கப்பட்ட சலவைத் தொழிலாளி மரணம்!

## மட்டக்களப்பில் சம்பவம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதியில் சலவைத் தொழிலாளி மீது இளைஞர் குழு ஒன்று - கற்களால் தாக்கியதில் அவர் பரிதாபகரமாக உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் நடந்த இந்தச் சம்பவத்தில் சந்தி வெளியைச் சேர்ந்த சின்னத்தம்பி தியாகராசா என்பவரே உயிரிழந்தவராவார். இச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது-

சலவைத் தொழிலாளியான தியாகராசா சந்திவெளிப் பகுதியிலுள்ள வீடொன்றில் தொழில் செய்ததற்கான ஊதியம் பெறுவதற்காக நேற்று முன்தினம் காலை சென்றுள்ளார்.

அந்தவேளை- குறித்த வீட்டிலிருந்த இளைஞர் (12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

## யாழ். குடாநாட்டில்

# கைத்தொழில் முயற்சியாளருக்கு துரித கடன் திட்டம் அறிமுகம்!

### வடபகுதி விசேட நிறைவேற்று அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டில் உள்ள சிறிய நடுத்தரக் கைத்தொழில் முயற்சியாளர்களுக்கு துரித கடன் திட்டம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இத்துடன் புதிய கிளைகள் ஆரம்பிக்கப்பட்டு மக்கள் வங்கியின் சேவைகள் விஸ்தரிக்கப்படும்.

இவ்வாறு வடபகுதிக்கான விசேட நிறைவேற்று அதிகாரி சி.இளம்பிறை நாதன் தெரிவித்தார்.

மக்கள் வங்கி அலுவல கத்தில் நேற்று இடம்பெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில் - பாடசாலை மாணவர்கள் மக்கள் வங்கியில் 39 ஆயிரத்து 130 சேமிப்புக் கணக்கினை வைத்துள்ளனர். இவர்கள் இந்த வருட அரையாண்டு வரை 157.8 மில்லியன் ரூபா பணத்தினைச் சேமித்துள்ளனர்.

எதிர்வரும் ஜூலை மாதம் 1 ஆம் திகதி மக்கள் வங்கி தனது 43 ஆவது நிறைவாண்டினைக் கொண்டாடவுள்ளது.

இதனை முன்னிட்டு சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களுக்கு துரித கடன் திட்டமொன்றை ஆரம்பித்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் மக்கள் வங்கியின் 13 கிளைகளும், மூன்று விசேட கிளைகளும் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் கோரிக்கைகளுக்கு அமைய கொடிகாமம், சண்டிலிப்பாய், இணுவில், மல்லாகம் போன்ற பிரதேசங்களில் நடமாடும் வங்கிச் சேவையினை நடத்துகின்றோம். இவற்றை விட, நாடு தழுவியரீதியில் 365 மக்கள் வங்கிக் கிளைகள் உள்ளன. இவற்றில் 5 கிளைகள் வைப்புச் சேமிப்பில் 50 கிளைகள் தெரிவாகியுள்ளன எனவும் தெரிவித்தார்.

# இசைவிடு தூது ஒலிநாடா வெளியீட்டு விழா நாளை!

(சுதுமலை)




திருமறைக் கலாமன்றம் - சமாதானப் பாடல்கள் அடங்கிய 'இசை விடு தூது' என்ற இசைத்தட்டு வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

திருமறைக்கலாமன்ற கலைத் தூது மணி மண்டபத்தில் இடம்பெறும் இந்த வெளியீட்டு விழாவில், பிரதம விருந்தினராக ஈழத்து இசையமைப்பாளர் கண்ணனும், சிறப்பு விருந்தினராக யாழ்.மறை மாவட்ட நீதிக்கும் சமாதானத்துக்குமான இயக்குநர் அருட்திரு பேனாட் அடிகளும், மதிப்பீட்டுரையினை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் வெளியீட்டுரையினை மன்றத்தின் பிரதி இயக்குநர் ஜோன்சன் ராஜ்குமாரும் நிகழ்த்துவர்.

அமைதிக்கான உலகமக்களின் ஏக்கங்களை, கனவுகளை தாங்கியதான இந்த ஒலிநாடா, இசை விடு தூது திருமறைக்கலாமன்றத்தினரின் தொடர் வெளியீடுகளில் ஒன்றென்பது குறிப்பிடத்தக்கது. (91)


**The Royal College of Jaffna**

ஆங்கிலம் படிக்கின்றீர்களா, புத்திசாலியாகவும் இருக்கிறீர்கள். ஆனால், கதைக்க முடியவில்லையா? கவலை வேண்டாம்.

Spoken English By :
விக்கினேஸ்வரன் ஆச்சாரி.
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2399)

**நிறஞ்சனாஸ்** சங்கானை

விக்ரம், ஜோதிகா, வடிவேல் நடித்த



அருள்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி,சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
EHPOSURE (சி-2621)

**நாகம்ஸ்** சுன்னாகம்

மாற்றியமைக்கப்பட்ட டொல்பி ஒலி அமைப்புடன்

சூர்யா, மாதவன், மீராஜாஸ்மின், ஈஷா நடித்த



ஆய்த எழுத்து

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-2622)

**ராஜா** யாழ்ப்பாணம்.

அநேகரின் வேண்டுகோளுக்கு இணங்க

விஜய், திரிஷா, பிரகாஷ்ராஜ் நடித்த



கில்லி

காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
(சி-2621)


# நடன சங்கம நிகழ்வு

தேவா மாக்கற்றிங் அன் அட்வடைசிங் சிஸ்ரம் ஸ்தாபனத்தார் நடத்தும் நடன சங்கம நிகழ்வு நாளை பிற்பகல் 1 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.


**யாழ். மண்ணில் மாபெரும் கண்டிய நடனம்**

இலங்கையின் தேசிய நடனமான கண்டிய நடனம் யாழ்மண்ணில் உலகப்புகழ்வாய்ந்த கண்டிய நடனக் கலைஞர்களால் ஒவ்வொரு நடனத்திற்குமான தனித்தனி விளக்கங்கள் தமிழில் விளக்கப்படுத்தி நடைபெறவுள்ளது. இக்கண்டிய நடன நிகழ்ச்சியின் நடன அம்சங்களாக:



01. மங்கள வாத்தியத்துடன் நடனம்
02. பூஜா நடனம்
03. மயில் நடனம்
04. உடக்கி என்று அழைக்கப்படும் சாஸ்திரிய நடனம்
05. முகமூடி நடனம்
06. யக்கம் என்று அழைக்கப்படும் நகைச்சுவை நாட்டிய நாடகம்
07. கஜகாவண்ண நடனம்
08. ரபான் நடனம்
09. கோலாட்டம்
10. தமிழ் நடனப் பாடலுக்கு அபிநயம்
11. பந்தேரு நடனம்
12. பெண்கள் தீயுடன் ஆடும் நடனம்
13. கிராமத்து நடனம்
14. செம்பு நடனம்

இந்த நடனங்களுடன் இன்னும் பல கண்டிய நடனங்களும் நடைபெறவுள்ளன.

இடம் : யாழ்.வீரசிங்கம் மண்டபம்
காலம் : 2004.06.27 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பி.ப. 1.00 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அனுமதிக்கு முந்துங்கள்.

**T.K. ரூறிஸ்ற் இன்**

இல.200, அரசடி வீதி,
பலாலி வீதி அருகில், கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல.021 - 222 5680
(சி-2691)



# மிதிவெடி அபாயக் கல்வி வாரம்

## யூன் 21 தொடக்கம் யூன் 27 வரை

## மிதிவெடித்தடை ஒப்பந்தம் (ஒட்டோவா உடன்படிக்கை) அமுல்படுத்தப்பட்டால்!

- மிதிவெடியினைப் பயன்படுத்துதல், உற்பத்தி செய்தல், விருத்தி செய்தல், பொறுப்பேற்றல், இடமாற்றம் செய்தல் போன்ற செயற்பாடுகளைச் செய்யமுடியாது.
- சேகரித்து வைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) நான்கு வருடங்களினுள் முற்றாக அழிக்கப்படும்.
- நிலத்தில் புதைக்கப்பட்ட கண்ணிகள் (மிதிவெடிகள்) 10 வருடங்களினுள் அகற்றப்பட்டு அழிக்கப்படும்.
- கண்ணிகளினால் பாதிக்கப்பட்டோர்க்கான புனர்வாழ்வு, கண்ணிவெடி அபாயக்கல்வி, சேகரித்து வைத்திருத்தலை அழித்தல், கண்ணிவெடிய கற்றல் ஆகிய செயற்பாடுகளுக்கு உதவி வழங்கும் நாடுகள் தாராளமாக உதவிபுரியும்.




(சி/2677)

**District Mine Action Office, Jaffna**
மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகம், யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத நடவடிக்கைகளை ஐ.தே.கவினர் கைவிடவேண்டும்

## ஜே.வி.பி கூறுகிறது

(கொழும்பு)

சட்டவிரோத நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக் கட்சி நிறுத்த வேண்டியது அவசியமென்று ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

ஐக்கிய தேசியக்கட்சியின் இத்தகைய நடவடிக்கைகளுக்கு எதிராக குரல் எழுப்புவது பொதுமக்களின் கடப்பாடு என்று பிரதியமைச்சர் சுனில் ஹந்துநெட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பொதுச்சொத்து உடைமைச்சட்டத்தின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சரைக் கைதுசெய்ய பொலிஸார் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை அவரது இல்லத்திற்குச் சென்றபோது இடம்பெற்ற சம்பவங்களை அடிப்படையாக வைத்து இந்த அறிக்கையை அவர் வெளியிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவை கைதுசெய்வதற்கு நீதிமன்றக் கட்டளை இல்லாதிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

எனினும், போதிய சாட்சியங்கள் இருக்குமேயானால் எந்தவொரு நபரையும் கைதுசெய்வதற்கு பொலிஸாருக்கு அதிகாரம் இருக்கிறது.

எனவே இந்தக் கைதைத்தடுத்து நிறுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை பயன்படுத்துவதற்கு எவருக்கும் அனுமதியில்லை. நாட்டில் பாரபட்சமின்றி சட்டம், ஒழுங்கு நிலைநாட்டப்படுவது அவசியமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.



அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே, அமெரிக்க வர்த்தகத் திணைக்கள பிரதிநிதியுடன் சுதந்திர வர்த்தக உடன்பாடு குறித்த பேச்சுக்களில் ஈடுபட்டபோது எடுக்கப்பட்ட படம்.

# இருபது இலட்சம் ரூபா பெறுமதியான முத்துக்கள் உகண பிரதேசத்தில் மீட்பு!

அம்பாறை பொலிஸ் பிரிவிலுள்ள உகண பிரதேசத்திலிருந்து 20 லட்சம் ரூபா பெறுமதியான முத்துக்களை பொலிஸார் கைப்பற்றினர்.

விற்பனைக்குத் தயார் நிலையிலிருந்த இந்த முத்துக்கள் தொடர்பாக பொலிஸாருக்குக் கிடைத்த ரகசியத் தகவலையடுத்து, அம்பாறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் விசேட பணிப்புரையின் பேரில் தலைமைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜயந்த ரத்நாயக்க தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரே முத்துக்களைக் கைப்பற்றினர். அத்துடன், இவர்கள் இரண்டு சந்தேக நபர்களையும் கைதுசெய்தனர்.

ஒரு சந்தேகநபரிடமிருந்து 52 முத்துக்களும் மற்றைய சந்தேக நபரிடமிருந்து 64 முத்துக்களும் கைப பற்றப்பட்டன.

இந்த முத்துக்கள் திருடப்பட்டனவா அல்லது யானையைக் கொன்று தந்தத்தை எடுத்துப் பெறப்பட்டனவா என்பது தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புனாவை கடற்படை முகாம் விஸ்தரிக்கப் படுகின்றது!

(வவுனியா)

வவுனியா நகரிலிருந்து 6 கிலோமீற்றர் தெற்காக உள்ள புனாவை கடற்படை முகாமை பெரியளவில் விஸ்தரிக்கும் நடவடிக்கையில் கடற்படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

வவுனியாவில் ஏற்கனவே ஜோசப் முகாம் பல ஏக்கர் விஸ்தீரணமாக அமைக்கப்பட்டுள்ள நிலையில் இதற்கு அடுத்தபடியாக மிகப் பிரமாண்டமான அளவில் இந்தக் கடற்படை முகாம் அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே சிறியதாக இருந்த முகாமை கடற்படையினர் பல ஏக்கர் விஸ்தீரணமுள்ள காட்டுப் பகுதியை அழித்து விஸ்தரித்து வருகின்றனர். வவுனியாவில் உள்ள பல முகாம்கள் அண்மைக்காலங்களில் புதுப்பிக்கப் பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## திருமலை பாடசாலைகளில்

# வேலைத் திட்டங்கள் குறித்து கல்விக் கழகக் குழு ஆராய்வு!

தமிழீழ விடுதலைப் புலிகளின் கல்விக்கழகத் துணைப்பொறுப்பாளர் அருண் மாஸ்ரர் தலைமையிலான குழுவினர் திருகோணமலை மாவட்டத்துக்கு விஜயம் செய்து 39 பாடசாலைகளின் வேலைத்திட்டங்களை அவதானித்துச் சென்றனர்.

கடந்த புதன்கிழமை திருகோணமலைக்கு வந்த குழுவில் 12 பேர் அடங்கியிருந்தனர். இவர்கள் திருகோணமலை கல்வி வலயத்தின் எல்லைக்குட்பட்ட பாடசாலைகளை மேற்பார்வை செய்தனர்.

இதனைத் தொடர்ந்து தமிழ்மொழி மூல பாடசாலை அதிபர்களைச் சந்தித்து, பாடசாலைகளின் குறைநிறைகளைக் கேட்டறிந்துகொண்டனர்.

திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் 9.00 மணி தொடக்கம் மதியம் 1.00 மணிவரை அதிபர்களுக்கான கூட்டமும் நடைபெற்றது.

மாலை - பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கச் செயலாளர்களையும், பழைய மாணவர் சங்கச் செயலாளர்களையும், வலயக் கல்வி அலுவலக கேட்போர்கூடத்தில் சந்தித்த குழுவினர் பாடசாலையின் தேவைகளைக் கேட்டறிந்து கொண்டனர்.

திருகோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் தேவிகாராணி முருகுப்பிள்ளை தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இதில் கல்விக் கழகத்தின் துறைப்பொறுப்பாளர் அருண மாஸ்ரர், திருகோணமலை மாவட்டக் கல்விக் கழகப் பொறுப்பாளர் கவியன்பன், மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் புரட்சி, யாழ். மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றனர்.

வலயக் கல்வி அலுவலகத்தின் சார்பில் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் அபிவிருத்தி ஜி.எப்.லூயிஸ், பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் முகாமைத்துவம் எம்.விஜேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

பெரும்பாலான பாடசாலை அபிவிருத்தி சங்கத்தின் செயலாளர்கள்-ஆசிரியர்களின் தேவைகளையும, வளங்களின் பற்றாக்குறையையும் எடுத்துக்கூறினர். பாடசாலை அபிவிருத்தி சங்கங்களின் பொதுக்கூட்டங்களுக்கு கல்விக் கழக உறுப்பினர்களை அழைப்பதன் மூலம் நிலைமைகளைப் பெற்றோர்களுக்கு தெளிவுபடுத்திக்கொள்ளலாம் எனவும் ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

பல பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருக்க, சில பாடசாலைகளில் ஆசிரியர்கள் மேலதிகமாக இருப்பதும் சுட்டிக்காட்டப்பட்டது. நகர மையத்திலுள்ள பாடசாலை ஒன்றில் 10 மாணவர்களுக்கு ஒரு ஆசிரியர் என்ற வீதத்தில் சேவையாற்றுவதும் இங்கு கண்டறியப்பட்டது. (04,10)

## பட்டதாரிகள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

இலங்கை வங்கியில் கடந்த ஒன்றரை வருடகாலமாக பயிற்சிகளுடன் சேவையாற்றி வந்த பட்டதாரிகள் நேற்றுமுன்தினம் முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர். தாம் ஒன்றரை வருடகாலமாக வங்கிக் கிளைகளில் சேவையாற்றியபோதும் தற்சமயம் தம்மை பணிகளிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுவருவதை ஆட்சேபித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டுவருகிறது. (01)

# தமிழக மீனவர்கள் மீது கடற்படையினர் தாக்குதல்!

(ராமேஸ்வரம்)

இலங்கைக் கடற்பகுதிக்குள் அத்துமீறி மீன்பிடித்ததாக கைது செய்யப்பட்ட ராமேஸ்வரம் மீனவர்களை, இலங்கைக் கடற்படையினர் கடுமையாக அடித்து உதைத்துள்ளனர். இதனால் ராமேஸ்வரத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

ராமேஸ்வரத்தைச் சேர்ந்த 600 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் பல்வேறு படகுகளில் மீன்பிடிக்க வந்தனர். கச்சதீவு அருகே அவர்கள் இறால், மீன்களைப் பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர்.

அப்போது இலங்கைக் கடற்படையினர் விரைந்து வந்தனர். அவர்களைக் கண்டதும் தமிழக மீனவர்கள் தப்பிச்செல்ல முயன்றனர். ஆனால், வானத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் மிரட்டியதால் தமிழக மீனவர்கள் தப்பிச்செல்ல முயற்சிக்கவில்லை.

பின்னர் தமிழக மீனவர்களின் படகுகளுக்கு வந்து அவர்களைச் சரமாரியாக தாக்கிய இலங்கைக் கடற்படையினர், தமிழக மீனவர்கள் பிடித்து வைத்திருந்த மீன்களை எடுத்துச்சென்றதுடன், வலைகளை அறுத்தெறிந்தனர்.

இனிமேல் இலங்கைக் கடற்பகுதிக்குள் வந்தால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று இலங்கைக் கடற்படையினர் எச்சரித்துச் சென்றனர். இந்தத் தாக்குதலில் 5 மீனவர்கள் படுகாயமடைந்ததாகத் தெரியவருகிறது.

சமீபத்தில் தமிழக மீனவர்களுக்கும், இலங்கை மீனவர்களுக்கும் மாற்று நாட்டு கடற்பகுதிக்குள் வருவதில்லை என ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால், அந்த ஒப்பந்தத்தை மீறும்வகையில் ராமேஸ்வரம் மீனவர்கள் நடந்துகொண்டதாகத் தமிழக அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர்.

# இ.தொ.காவை இழுக்க ஆளும் கட்சி முயற்சி!

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸை தமது பக்கம் இழுக்கும் முயற்சிகளில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மீண்டும் மும்முரமாக ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி தோட்ட, உட்கட்டமைப்பு அமைச்சு, ஊடகத்துறை அமைச்சு உள்ளிட்ட மூன்று முக்கிய அமைச்சுப் பொறுப்புக்கள் அடுத்த மாதமளவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு வழங்கப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்களை மேற்கோள் காட்டி கொழும்பிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் இணைந்து கொள்ளவுள்ளதாக முன்னரும் பல தடவைகள் செய்திகள் வெளியாகியிருந்த போதிலும், பின்னர் இரண்டு தரப்புக்களுமே அந்தச் செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்திருந்தன.

இதேவேளை, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் தற்போது இந்தியா சென்றுள்ளதாகத் தெரியவருகிறது.

இவர் முன்பும் இந்தியாவில் இருந்த சந்தர்ப்பத்திலேயே தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து கொள்ளப்போவதாக செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (04,10)

# சிறுமியை வல்லுறவுக்குட்படுத்திய 14 வயதுச் சிறுவன் நீதிமன்றில்!

அம்பாறை பொத்துவில் களப்புக் கட்டுப் பகுதியில் சிறுமி ஒருவரைப் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்திய சிறுவனை எதிர்வரும் 1 ஆம் திகதி வரை மட்டக்களப்பு சிறைச்சாலையின் சிறுவர் விடுதியில் விளக்கமறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற நீதிவான் ரி.எல்.ஏ.மனாப் உத்தரவிட்டார்.

களப்புக்கட்டுப் பகுதியில் வசிக்கும் சிறுமியை அதே இடத்தில் வசிக்கும் 14 வயதுச் சிறுவன் பாலியல் வல்லுறவுக்குப்படுத்தியதாகக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

இந்தச்சம்பவம் தொடர்பாக குறித்த சிறுமியின் தாயார் பொத்துவில் பொலிஸ் நிலையத்தில் புகார் செய்ததையடுத்து பொலிஸார் சிறுவனைக் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - இந்தச் சிறுமியின் தாயார் கடந்த 17 ஆம் திகதி காலை 8 மணியளவில் சிறுமியை பக்கத்து வீட்டில் விட்டு விட்டு காட்டுப் பகுதிக்கு விறகு எடுக்கச் சென்றபோது சிறுமி இருந்த வீட்டுக்காரர்கள் அவசர வேலை காரணமாக வெளியே சென்றிருந்தனர். இந்த வேளை வீட்டிற்கு வந்த சிறுவன் ஒருவனே இச்சிறுமியை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளாரென தெரியவருகிறது.

## கொழும்பு கடற்கரையில் பெண்ணின் சடலம்

கொழும்பு - பம்பலப்பிட்டி கடற்கரையில் சுமார் 40 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

பம்பலப்பிட்டி - சறபறி காடன் என்ற இடத்திற்கு அருகிலுள்ள கடற்கரையின் கற்பாறைகளின் மேல் அநாதரவாகக் காணப்பட்ட இந்தச் சடலத்தில் பல கத்திக்குத்துக் காயங்கள் காணப்பட்டன.

இவரது ஆடையில் காணப்பட்ட கடதாசித்துண்டின் படி இவர் மட்டக்குளியப் பிரதேசத்தைச் சேர்ந்தவராக இருக்கவேண்டுமெனத் தெரிவித்த பொலிஸார், சம்பந்தப்பட்ட பெண் வேறொரு இடத்தில் கொல்லப்பட்ட பின்னரே இந்தக் கடற்கரைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாமெனவும் சந்தேகம் தெரிவித்தனர்.

## புறக்கோட்டையில்

# கட்டடம் இடிந்து வீழ்ந்து இருவர் பரிதாப மரணம்!

(கொழும்பு)

கொழும்பு - புறக்கோட்டை நான்காம் குறுக்குத் தெருப் பகுதியில் கட்டடம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் இரண்டு பேர் உயிரிழந்ததுடன் மேலும் 8 பேர் படுகாயமடைந்தனர்.

நேற்று அதிகலை 4.30 மணிக்கு இடம்பெற்ற இந்த அனர்த்தத்தின் போது - கட்டடத்திற்குள் வேலை செய்துகொண்டிருந்த ஊழியர்களே உயிரிழந்துடன், காயங்களுக்கும் உள்ளாகினர்.

ஸ்தலத்திற்கு விரைந்த தீயணைப்புப் படையினர் இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களை மீட்டெடுத்தனர்.

மீட்கப்பட்டவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.

இக்கட்டடம் இடிந்து வீழ்ந்ததால் அருகில் இருந்த கடைகள் சிலவும் சேதமடைந்தன.

இந்தக் கட்டடம் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்ததாக கொழும்பு மாநகரசபையின் பிரதி மேயர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரையிறுதிக்குள் போர்த்துக்கல் இங்கிலாந்து மண் கௌவியது!



ஐரோப்பியக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டித்தொடரின் காலிறுதியாட்டம் நேற்றுமுன்தினம் தொடங்கியது. லிஸ்பன் நகரில் நடந்த ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் முதலிடத்தைப் பிடித்த போர்த்துக்கல் - 'பி' பிரிவில இரண்டாவது இடத்தைப் பிடித்த இங்கிலாந்து அணிகள் மோதின.

ஆட்டம் தொடங்கிய மூன்றாவது நிமிடத்திலேயே இங்கிலாநது கோல் அடித்து முன்னிலை பெற்றது. மைக்கல் ஓவன் தலையால் மோதி இந்தக் கோலை அடித்தார்.

பதில் கோல்போட போர்த்துககல் வீரர்கள் போராடினார்கள். ஆனால் முடியவில்லை.

முதல்பாதி ஆட்டநேர முடிவில் இங்கிலாந்து 1:0 என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. இரண்டாவது பகுதியாட்டம் விறுவிறுப்பாக இருந்தது. 83 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் வீரர் போஸ்டிகா பதில் கோலை அடித்து சமன் செய்தார். ஆட்டநேரமுடிவில் இரு அணிகளும் 1:1 என்ற சமநிலையில் இருந்தன.



இதனால், கூடுதல்நேரம் கொடுக்கப்பட்டது. கூடுதல்நேரத்தில் எந்த அணி முதலில் கோல் அடிக்கிறதோ அந்த அணி வெற்றிபெறும். இது கோல்டன் கோலாகும். ஆனால் இந்தப் போட்டியில் அந்த விதி கடைப்பிடிக்கப்படவில்லை.

'சில்வர்கோல்' என்ற விதி பயன்படுத்தப்பட்டது. கூடுதல் நேரத்தில் எந்த அணி கோல்போட்டாலும் 15 நிமிடம் ஆடவேண்டும். 15 நிமிட முடிவில் எந்த அணி கோல் அடித்து முன்னணி பெறுகிறதோ அந்த அணி வெற்றிபெறும்.

இதில் சமநிலை இருந்தால் மீண்டும் 15 நிமிடம் கூடுதலாகக் கொடுக்கப்படும். கூடுதல் நேரத்தில் முதல் 15 நிமிடத்தில் இரு அணி வீரர்களும் கோல் எதுவும் போடவில்லை. இதனால் இரண்டாவதாக மீண்டும் 15 நிமிடம் கூடுதல்நேரம் கொடுக்கப்பட்டது.

கூடுதல் நேரத்தின் 20 ஆவது நிமிடத்தில் போர்த்துக்கல் கோல் அடித்தது. ருயி கோஸ்டா இந்தக் கோலை அடித்தார். இந்தக் கோல் மூலம் போர்த்துக்கல் 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந்தக் கோல் விழுந்த 5 ஆவது நிமிடத்தில் இங்கிலாந்து வீரர் லேம் பர்ட் பதில் கோல் அடித்து சமன் செய்தார். கூடுதல் நேரத்தின் முடிவில் இரு அணிகளும் 2:2 எனற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. இதனால் தண்டனை உதை கடைப்பிடிக்கப்பட்டது.

தண்டனை உதையில் போர்த்துக்கல் 6:5 என்ற கோல் கணக்கில் வென்று அரையிறுதிக்கு தகுதிபெற்றது. இங்கும் அரையிறுதிக்கு தகுதி பெற்ற முதலாவது நாடு போர்த்துக்கலாகும். ஐரோப்பியக் கிண்ணப் போட்டியில் அந்த அணி முதன்முறையாக அரையிறுதியில் நுழைந்தது.

தண்டனையுதை மூலம் இங்கிலாந்து கப்டன் டேவிட் பெக்காம், பந்தை கோல்கம்பத்தின் மேல் அடித்து கோல் போடும் வாய்ப்பைக் கெடுத்தார்.



இதேபோல், அந்த அணியைச் சேர்ந்த டாரிபஸ் வாசெல் அடிதத பந்தை போர்த்துக்கல் கோல் கீப்பர் ரிக்கார்டோ அருமையாகத் தடுத்தார். இதுவே போர்த்துக்கல் அணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்தது.


நேற்றுமுன்தினம், நடந்த போட்டியில் முறைகேடாக விளையாடியதாக போர்த்துக்கல் வீரர்கள் - கோஷ் டிக்கா, வெகோ, நிக்காடேவி, கர் வால்கோ ஆகியோரும் - இங்கிலாந்து அணிவீரர்கள் - ஹெறாட், கய நெவில், பில்நெவில் ஆகியோரும் போட்டி நடுவராக உள்ள மெயரால் மஞ்சள் அட்டை காண்பிகப்பட்டு வெளியேற்றப்பட்டனர்.



இந்தப் போட்டியை சுமார் 65 ஆயிரம் ரசிகர்கள் பார்வையிட்டனர்.

போர்த்துக்கல் அணி அரையிறுதி ஆட்டத்தில் சுவீடன் அல்லது ஹொலனட் அணிகளை 30 ஆம் திகதி சந்திக்கும்.

# முன்னணி ஐரோப்பிய அணிகளின் பயிற்சியாளர்கள் பதவி விலகினர்



யூரோ தொடர் தோல்வியை அடுத்து ஜேர்மன் அணியின் பயிற்சியாளர் பதவியை ரூடிவாலர் ராஜினாமாச் செய்தார்.

2000 ஆம் ஆண்டில் யூரோ கிண்ணத்தில், ஜேர்மனியின் மோசமான செயற்பாட்டையடுத்து, எரிக் ரிபக் நீக்கப்பட்டு வாலர் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டார்.

இவரது பயிற்சியில் புதுப்பொலிவு பெற்ற ஜேர்மனி, 2002 ஆம் ஆண்டு உலகக்கிண்ண இறுதிவரை முன்னேறியது. இவரது ஒப்பந்த காலம் 2006 இல் நிறைவு பெறுகிறது.

ஆனாலும், தோல்விக்குப் பொறுப்பேற்று பதவி விலகுவதாக அவர் அறிவித்துள்ளார். 2002 ஆம் ஆண்டு உலகக் கிண்ண இறுதிப் போட்டியில் ஜேர்மனி தோற்றாலும், இரண்டாம் இடம்பெற்றது மகிழ்ச்சியளித்தது. ஆனால், யூரோ 2004 ஆம் ஆண்டில் மூன்று போட்டிகளில் இரண்டு கோல் மட்டும் அடித்தது - மிகுந்த ஏமாற்றத்தை அளித்தது.

இதையடுத்து, பதவி விலகுவதே சிறந்தது என்றார் வாலர்.

தற்போது 44 வயதான வாலர் ஜேர்மனியின் முன்னாள் வீரராவார். 1990 ஆம் ஆண்டில் உலகக் கிண்ணத்தைப்பெற இவர் முக்கிய காரணமாக இருந்தார்.

இவர் 90 சர்வதேச போட்டிகளில் 47 கோல்கள் அடித்த பெருமை மிக்கவர். முனிச்கிளப் அணியின் பயிற்சியாளர் ஆட்மர் ஹிட்ஸ்பில்ட் ஜேர்மனி அணியின் புதிய பயிற்சியாளராக நியமிக்கப்படலாம் எனத் தெரியவருகிறது.

யூரோ 2004 உதைபந்தாட்டத் தொடரில் வெளியேறிய ஸ்பெயின், இத்தாலி ஆகிய அணிகளின் பயிற்சியாளகளும் ராஜினாமா செய்துள்ளனர்.

# விம்பிள்டன் ரெனிஸ் போட்டி; வீனஸ் வில்லியம்ஸ் தோல்வி!



(லண்டன்)

கிராண்ட்சிலாம் போட்டிக ளில் ஒன்றான விம்பிள்டன் ரெனிஸ் போட்டி லண்டன் நகரில் நடைபெற்றுவருகிறது.

உலகின் 3 ஆம் நிலை வீராங்கனையான வீனஸ் வில்லியம்ஸ் 2ஆவது சுற்றில் குரோஷியாவை சேர்ந்த கரோலினா ஸ்பாரம்பை எதிர் கொண்டார்.

இதில் யாருமே எதிர்பார்க்காத வண்ணம் வீனஸ் வில்லியம்ஸ் அதிர்ச்சிகரமாக தோற்றார். 19 வயதான கரோலினா 7-6, (7-5), 7-6 (8-6) என்ற நேர் செட் கணக்கில் வீனசை தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றார்.

2000, 2001 ஆம் ஆண்டுகளில் விம்பிள்டன் பட்டத்தை கைப்பற்றிய வீனஸ், 1997 ஆம் ஆண்டுக்கு பிறகுதான் இப்படி மோசமாகத் தோல்வியடைந்துள்ளார். 1997 ஆம் ஆண்டு முதல் சுற்றில் வெளியேறினார். கடந்த மாதம் நடந்த பிரெஞ்சு ஓப்பனிலும் அவர் முதல் சுற்றில் தோற்றார்.

இதேபோல் மேரிபியர்சும் முதல் சுற்றில் தோற்றார்.

உலகின் முதல் நிலை வீரரான ரோஜர் பெடரர் (சுவிட்சர்லாந்து) 6-1, 6-2, 6-0 என்ற நேர் செட் கணக்கில் கொலம்பியாவை சேர்ந்த அலெக்சாண்டராவை தோற்கடித்து 3 ஆவது சுற்றுக்கு தகுதிபெற்றார்.

6 ஆம் நிலை வீரரான கார் லோஸ் பெரைரா (ஸ்பெயின்) 4-6, 7-5, 5-7, 7-6, (8-6), 8-6 என்ற செட் கணக்கில் கடும்போராட்டத்திற்கு பிறகு ஸ்டெபானை [illegible] சுற்றில் நுழைந்தார். லைட் ஹெவிட் (அவுஸ்ரேலியா) கார்லோஸ் மோயா (ஸ்பெயின்), டேவன் போர்ட் (அமெரிக்கா) ஆகியோரும் 3 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை பாடசாலைகளிடையே உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி!

(திருகோணமலை)

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் மாவட்டங்கள் தோறும் 15 வயதுக்குட்பட்ட மாணவர்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிகளை நடத்திவருகிறது.

திருகோணமலை மாவட்டத்துக்கான போட்டியில் 11 பாடசாலைகளைச் சேர்ந்த அணிகள் 2 குழுக்களில் லீக் முறையில் பங்குகொள்கின்றன.

புனித சூசையப்பர் கல்லூரி, திஸ்ஸ வித்தியாலயம், கந்தளாய் அல் தாரிக் வித்தியாலயம், இறக்கண்டி அல் ஹம்ரா வித்தியாலயம், விக்னேஸ்வரா மகா வித்தியாலயம், புனித வளனர் தமிழ் வித்தியாலயம் என்பன 'ஏ' பிரிவிலும் -

ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, கிண்ணியா மத்திய கல்லூரி, ராஜகீய வித்தியாலோக வித்தியாலயம், கந்தளாய் பேராற்றுவெளி முஸ்லிம் வித்தியாலயம் என்பன 'பி' பிரிவிலும் போட்டியிடுகின்றன.

போட்டிகள் யாவும் மெக்கெய்சர் விளையாட்டு மைதான வெளியரங்கில் நடைபெறுகின்றன.

லீக் முறையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறும் 4 கழகங்கள் இறுதிச் சுற்றுக்குத் தெரிவுசெய்யப்படும் எனவும் - சுற்றுப்போட்டி இணைப்பாளர் ஜே.உதயரட்ணம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார். (04)

## மன்னாரில் உதைபந்தாட்டப் போட்டி

வடக்கு - கிழக்கு மாவடடங்களை உள்ளடக்கிய உதைபந்தாட்டப் போட்டி இன்றும், நாளையும் மன்னார் பொது மைதானத்தில் நடத்தப்படவுள்ளதாக வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம் தெரிவித்தது. இந்தப் போட்டிகளில் வடக்கு- கிழக்கு மாவட்டங்களைச் சேர்ந்த முக்கிய விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்ற விருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கே.சி.சி வெற்றிக் கிண்ண காலிறுதிப் போட்டிகள்!

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் நடத்தும் கே.சி.சி.சி வெற்றிக்கிண்ண காலிறுதிப் போட்டிகள் இன்றும் நாளையும் நடைபெறவுள்ளன.

இன்று காலை 8.30 மணிக்கு மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

பி.ப 1 மணிக்கு பற்றீசியன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து ஓல்ட் கோல்ட் விளையாட்டுக்கழகம் மோதும்.

நாளை காலை 8.30 மணிக்கு ஸ்ரான்லி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கே.சி.சி. விளையாட்டு கழகமும், பி.ப 1 மணிக்கு சென்றலைட் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து பல்கலைக்கழக அணியும் மோதவுள்ளன.




# யுவராஜ் தான் ஆரம்ப ஆட்டக்காரர் இந்திய கப்டன் கங்கூலி தெரிவிப்பு



இந்திய கிரிக்கெட் அணிக்கு டெஸ்ட் போட்டிகளில் யார் தொடக்க ஆட்டக்காரர் என்பதில் குழப்பம் நீடிக்கிறது. வீரேந்தர் ஷேவாக்குடன் இணைந்து யுவராஜ் சிங் ஆட்டத்தைத் தொடக்குவார் என்று கப்டன் சௌரவ் கங்கூலி அறிவித்தார். இதற்கு ஷேவாக், சச்சின் ஆகியோர் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

தொடக்க ஆட்டக்காரராக ஆகாஷ் சோப்ரா தொடரவேண்டும் என்று கருத்துத் தெரிவித்தனர்.

கொல்கத்தாவில் நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்ற கங்கூலியிடம் இது பற்றிக் கேட்டபோது -

டெஸ்ட் போட்டிகள் ஒக்டோபர் மாதம்தான் ஆரம்பிக்கின்றன. அதற்குள் தொடக்க ஆட்டக்காரர் பிரச்சினையை இப்போதே ஏன் தொடங்குகிறார்கள் என்று தெரியவில்லை. மத்திய வரிசை வீரர் யுவராஜ் சிறப்பாக விளையாடுகிறார்.

ஆரம்ப ஆட்டக்காரராகவும் அவர் முத்திரை பதிப்பார்.ஆரம்ப ஆட்டக்காரராக இறங்கத் தயாராகுமாறு யுவராஜ்சிடம் நான் ஏற்கனவே தெரிவித்தேன். அதில் குழப்பமே இல்லை.

அதற்காக ஆகாஷ் சோப்ராவையும் புறக்கணிக்கப் போவதில்லை. அவரது இடம் பற்றி தேர்வுக்குழுவினர் முடிவெடுப்பார்கள்.

பாகிஸ்தானை அவர்கள் சொந்த மண்ணில் வைத்தே ஜெயித்திருப்பதால், அடுத்துவரும் ஆசியக் கோப்பைத் தொடரை வென்றே தீரவேண்டிய நெருக்கடியுடன் களமிறங்குகிறோம். பாகிஸ்தான் தொடருக்குப் பறகு நாம் எந்தப் போட்டியும் விளையாடவே இல்லை என்பதையும் நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்.

போட்டி ஊதியம் சமீபத்தில் குறைக்கப்பட்டதாக வெளியான அறிவிப்பால், வீரர்கள் யாரும் வருத்தப்படவில்லை. என்று கூறினார் கங்கூலி.

# முத்தரப்பு கிரிக்கெட் தொடர் அன்ட்ரூ பிளின்டொப் விலகினார்

(லண்டன்)

இங்கிலாந்தில் நேற்று தொடங்கிய முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடர் முழுவதிலும் இருந்து இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரரான அன்ட்ரூ பிளின்டொப் விலகியுள்ளார்.

இங்கிலாந்து, நியூஸிலாந்து, மற்றும் மேற்கிந்தியத்தீவுகள் இடையேயான முத்தரப்பு ஒருநாள் போட்டித் தொடர் இங்கிலாந்தில் தொடங்கியது. இந்த முத்தரப்பு தொடரிலிருந்து கணுக்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக அன்ட்ரூ பிளின்டொப் விலகியுள்ளார்.

இரண்டு வாரகால ஓய்விலிருக்க பிளின்டொப் அறிவுறுத்தப்பட்டுள்ளார். எனவே முத்தரப்பு தொடரில் பிளின்டொப்பை விளையாட வைத்து ரிஸ்க் எடுக்க இங்கிலாந்து விரும்பவில்லை.

எனவே இந்த முத்தரப்பு தொடர் முழுவதிலுமிருந்து பிளின்டொப் விலகியுள்ளார்.

பிளின்டொப்புக்கு ஏற்பட்டுள்ள காயம் பலமானதாக இல்லை. இது மகிழ்ச்சியான செய்தியாகும். இந்த முத்தரப்பு தொடருக்கு அடுத்து நடைபெறவுள்ள மேற்கிந்தியத்தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரே பிளின்டொப்பின் இலக்காகும். என்று இங்கிலாந்து கிரிக்கெட்சபை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த முத்தரப்பு தொடரின் இறுதிப்போட்டி அடுத்தமாதம் 10 ஆம் திகதி லோர்ட்சில் நடைபெறும்.

# புவி ஈர்ப்பு விசை



* புவியீர்ப்பு விசை இருப்பதால் தான் எம்மால் பூமியில் நிற்கவோ, நடக்கவோ முடிகிறது. எம் உடல் எடைக்குத் தகுந்த அழுத்தத்தையோ, விசையையோ பூமி எம்மீது செலுத்தும்போது எமக்குச் சமநிலை கிடைக்கிறது.
* நிலவுக்கும், பூமிக்குமுள்ள புவியீர்ப்பு விசை வேறுபடுவதனால்தான் நிலவில் மனிதர்கள் குதித்துக் குதித்து நடக்க வேண்டி இருக்கிறது. பூமியின் இந்த விசையால்தான் நாம் எந்தப் பொருளைத் தூக்கிப் போட்டாலும், அது திரும்பக் கீழே வந்து விழுகிறது.
* பூமியிலிருந்து விண்ணுக்குச் செல்லும் ரொக்கெட்டுகள் இந்தப் புவியீர்ப்பு விசைக்கு எதிராக அதிவேகத்தில் செல்லும். சிறிது வேகம் குறைந்தாலும் திரும்ப பூமியில் விழுந்து விடும்.

# வார்த்தை விளையாட்டு

## சென்றவார விடைகள்

1. ஆடுகளம்.
2. கட்டாயம்.
3. யதார்த்தம்.
4. தட்பவெட்பம்.
5. வெடிப்பு.

# பாடசாலையில் ஒரு நாள்...

பாடசாலையில் கற்கும் மாணவப் பருவம் மிகவும் இனிமையான ஒன்றாகும். பாடசாலையில் மறக்கமுடியாத பல நிகழ்ச்சிகள் உங்களோடு தொடர்புபட்ட வகையில் நடைபெற்றிருக்கும். அவற்றை மீண்டும் நினைத்துப்பார்க்கும் பொழுது மகிழ்ச்சியாக இருக்கும். அவ்வாறான ஒரு சம்பவத்தை 'பாடசாலையில் ஓர் நாள்' என்ற தலைப்பீட்டு எழுதி அனுப்புங்கள். சுவையான சம்பவத்தை எழுதி அனுப்புபவருக்கு அன்பளிப்பு வழங்கப்படும்.

# My Self

My name is Sarmina Viknesvaran. I live in Uduppiddy. I am nine years old. My father's name Viknesvaran. He is a farmer. My mother's name V.Thilagavathy. She is a house wife. I study at J/Uduppiddy Girls College. I have a sister and a brother. My favourite subjects are English, Maths, and Tamil. My favourite game is hide and seek. My friend's names are kamsa and kayantha.

*V.Sarmina Grade 4 J/Uduppiddy Girls College.*

# 'இளமையில் கல்வி'

"இளமைக்காலம் இனிமைக்காலம்.
இனிமைக்காலம் என்றும் திரும்பவராது.
கல்வியும் காலம் சென்றால் மனதில் பதியாது.
காலம் போனால் கல்வியும் போகும்.
கல்வி எம்மைத் தேடி வந்த காலம் இளமைக்காலம்.
நாம் கல்விக்காக அலையும் காலம் வருவதைத் தவிர்க்க வேண்டும்.
ஆகையால் இளமையில் கல்வி சிலையில் எழுத்து".

சோதிலிங்கம் நிரோந்
இவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி
ஆண்டு 10

# மூளைக்கு வேலை

சென்றவார விடைகள்




# புதிர்கள்

சென்றவார விடைகள்

1. நான்கு மாம்பழங்களை மூன்று துண்டுகளாக வெட்டினால். பன்னிரெண்டு துண்டுகள் கிடைக்கும். ஆளுக்கொன்று கொடுங்கள். பின்பு மீதியுள்ள மூன்று மாம்பழங்களையும் நான்கு துண்டுகளாக வெட்டி. பன்னிரெண்டு துண்டுகளாக்கிக்கொடுங்கள்.
2. மந்திரியின் தங்கைதான் அந்த நாட்டு மகாராணி.
3. இரண்டும் ஒன்றே.

# மூளைக்கு வேலை

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் 10 கட்டங்களில் 11 முதல் 20 வரையுள்ள எண்களை எழுதுங்கள். ஆனால், நேர் நேர் வரிசையில் எந்தப் பக்கம் கூட்டினாலும், விடை 61 வரவேண்டும். எங்கே பார்க்கலாம்!

விடைகள் அடுத்தவாரம்

# புதிர்கள்

1. மோகன் ஆயிரம் ரூபாவோடு சந்தைக்குப் போனான். அங்கே அரிசி மூட்டைகளும், பருப்பு மூட்டைகளும், உமி மூட்டைகளும் வாங்கினான். அரிசி மூட்டையின் விலை ஒன்று 100 ரூபா, பருப்பு மூட்டையின் விலை இரண்டு 60 ரூபா, உமி மூட்டையின் விலை மூன்று 15 ரூபா.

சிறிது நேரத்தில் அவன் கொண்டு வந்த ஆயிரம் ரூபாவும் செலவழிந்துவிட்டது. ஆயிரம் ரூபா கொடுத்து தான் வாங்கிய மூட்டைகளை எண்ணிப் பார்த்தான். மொத்தம் 100 மூட்டைகள் இருந்தன. மோகன் வாங்கிய 100 மூட்டைகளில் அரிசி மூட்டை எத்தனை, பருப்பு மூட்டை எத்தனை, உமி மூட்டை எத்தனை?

02. அந்த மனிதரிடம் அவரது வயதைக் கேட்டால் சொல்ல மாட்டார். புதிர் போடுவார். அவர் போட்ட புதிர் -

என் வயதிலுள்ள இரு எண்களையும் கூட்டினால் ஒன்பது வரும். அந்த இரு எண்களையும் இடம்மாறிப் போட்டால், என் வயதில் ஒன்பது கூடிவிடும். என்றார். அப்படியானால் அவர் வயது என்ன? (விடைகள் அடுத்தவாரம்)

--- இங்கே மடிக்கவும் ---







# சிறுவர் அரங்கம்

**சிந்தனைக்கு!**

நல்ல எண்ணம் வெளிப்படையாகத் தெரிவதற்குக் காரணமாக இருப்பது நாக்கின் வார்த்தைகளே.



# விசித்திரமான சில்லுகள்


யோ. சத்யன்

சேவலாரும், முள்ளம் பன்றியாரும், தவளையாரும், தேனீயாரும் காட்டில் அழகான ஒரு வீட்டைக் கட்டி அதிலே ஆனந்தமாக வாழ்ந்து வந்தார்கள்.



விறகு வெட்டி எடுத்து வரச் சேவலாரும், தண்ணீர் அள்ளி வரத் தவளையாரும், தேன் சேகரித்து வரத் தேனீயாரும் சேர்ந்து ஒரு நாள் காட்டுக்குப் போனார்கள்.

காட்டுக்குப் போகும் வழியிலே, பழுது பட்டுக் கிடந்த மரத்தால் செய்யப்பட்ட தள்ளு வண்டியை நண்பர்கள் நால்வரும் கண்டார்கள். அந்தத் தள்ளு வண்டியோ பார்ப்பதற்கு விசித்திரமாயிருந்தது. வண்டியிலிருந்த நான்கு சில்லுகளும் வெவ்வேறு அளவுகளைக் கொண்டிருந்தன.



நண்பர்கள் தள்ளுவண்டியை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருந்த வேளையில், அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தார் ஒரு சாம்பல் முயலார். முயலாரே, முயலாரே யாருடைய தள்ளு வண்டி இது என்று முள்ளம் பன்றியார் முயலாரைப் பார்த்துக் கேட்டார்.

குண்டுக் கரடியார் செய்த அற்புதமான வண்டி இது என்று சிரித்துக்கொண்டே சொன்னார் சாம்பல் முயலார்.



கரடியாருக்கு ஓடாத இந்தத் தள்ளு வண்டி இனி மேல் தேவையில்லையாம். யாருக்காவது தேவையானால் தாராளமாக எடுத்துக் கொள்ளச் சொன்னார் என்றார் சாம்பல் முயலார்.

சாம்பல் முயலார் சொன்னதைக் கேட்ட நண்பர்கள் நால்வரும் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள்.

கரடியாரின் வண்டியை வீடு கொண்டு போய்ச் சேர்க்க முடிவு செய்தார்கள். வெவ்வேறு அளவான சில்லுகளைக் கொண்ட விசித்திரமான தள்ளு வண்டியோ நகர்ந்துஓட மறுத்து நின்றது.



முட்டாள் கரடியார் செய்த விசித்திரமான சில்லுக்களைக் கொண்ட இந்தத் தள்ளுவண்டி உங்களுக்குத் தேவையா என்ன?



என்று சிரித்துக்கொண்டே கேட்டார் சாம்பல் முயலார். நண்பரே, தள்ளு வண்டி நமக்குத் தேவையில்லை அதன் விசித்திரமான சில்லுகள் தான் தேவை என்றார் முள்ளம் பன்றியார்.



வண்டியிலிருந்த சில்லுகளில் மிகவும் பெரியதைச் சேவலாரும், மிகவும் சிறியதைத் தேனீயாரும் தள்ளி எடுத்துக் கொண்டு வீடு சேர்ந்தார்கள்.



தேனீயார் தான் தள்ளி எடுத்து வந்த சில்லை வைத்து ஏறி ஓடி விளையாட ஒரு வண்டிலைச் செய்தார்.


முள்ளம் பன்றியார் தான் எடுத்து வந்திருந்த சில்லை வைத்துத் தனக்கு ஒரு கை வண்டியை அமைத்தார்.



தவளையார் தனது சில்லை வைத்துக் கிணற்றுக்குக் கப்பி ஒன்றை அமைத்தார். கிணற்றிலே கப்பி இருந்தால், தோட்டத்துக்குத் தண்ணீர் இறைத்திட வசதியாய் இருக்கும் அல்லவா.



தான் எடுத்து வந்திருந்த பெரிய சில்லை வைத்துச் சேவலார் ஆற்றின் கரையில் அரிசி அரைத்திடும் ஆலை ஒன்றைக் கட்டினார். தோட்டத்தில் விளையும் நெல்லை அரிசியாக்கி, மாவாக அரைத்திட ஆலை உதவிடும் அல்லவா. தோட்டத்திலே அறுவடை செய்த நெல்லை மூட்டை ஒன்றிலே போட்டுக் கை வண்டியிலே வைத்து எடுத்து வந்தார் முள்ளம் பன்றியார்.



முள்ளம் பன்றியார் எடுத்து வந்த நெல்லைத் தனது ஆலையிலே அரைத்து அரிசிமாவாக்கினார் சேவலார்.



சேவலாரும், முள்ளம் பன்றியாரும், தவளையாரும், தேனீயாரும் அரிசி மாவிலே சுவையான பண்டங்கள் சுட்டு ஆனந்தமாகச் சாப்பிட்டார்கள்.



விருந்துக்கு வந்தார் சாம்பல் முயலார். நண்பர்களின் முயற்சியைப் பாராட்டி மகிழ்ந்தார் சாம்பல் முயலார். முயற்சி கொண்டு உழைப்பவர்கள் எனது நண்பர்கள். உழைப்பால் வெற்றி பல கண்டவர்கள் எனது நண்பர்கள். நண்பர்கள்-அவர்கள்போல நானும் உழைத்து வாழ்வினில் உயர்ந்திடுவேன் என்று இனிமையாகப் பாட்டுப் பாடினார் சாம்பல் முயலார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சோ. பிரசாந்தன்
கற்கும் பாடசாலை :-
வைத்தீஸ்வராக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல்



முழுப்பெயர் :- க. விவேகன்
கற்கும் பாடசாலை :-
யாழ். ஹாட்லிக் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
முத்திரை சேகரித்தல், கிரிக்கெட், ஓவியம் வரைதல்.



முழுப்பெயர் :- அ. அர்ச்சனா
கற்கும் பாடசாலை :-
யாழ்ப்பாணம் மெதடிஸ்ட் பெண்கள் உயர்தரப் பாடசாலை.
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
ஓவியம் வரைதல், கதைகள் வாசித்தல்.



முழுப்பெயர் :- ம. டர்சினி
கற்கும் பாடசாலை :-
கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- உ. றமணன்
கற்கும் பாடசாலை :-
விக்னேஸ்வராக் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், ஓவியம் வரைதல்.

முழுப்பெயர் :- யோ. கமல்ராஜ்
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
தொலைக்காட்சி பார்த்தல், பத்திரிகை வாசித்தல், சுற்றுலாச் செல்லல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :.....................................
கற்கும் பாடசாலை :.....................................
கற்கும் தரம் :.....................................
வீட்டு முகவரி :.....................................
பிறந்த திகதி :.....................................
ஆர்வமுள்ள துறைகள் :.....................................

.................... ....................
திகதி ஒப்பம்

.................... ....................
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

## உங்கள் கைவண்ணம்



வி.மிதுர்ஷன் - தரம் - 2
உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி.



கே. சசிதன்
தரம் - 7
பளை மத்திய கல்லூரி.


இங்கே மடிக்கவும்



## அன்புள்ள சிறுவர்களே!

உங்களுடைய பட்டியலைத் தயாரித்து விட்டீர்களா? இனி அதற்கான தீர்வுகளைப்பற்றி ஆலோசித்து முடிவுக்கு வரவேண்டும். உதாரணத்திற்கு ஓரிரண்டைப்பற்றி பார்ப்போம்.

கணிதத்தில் அதிக புள்ளிகள் பெறமுடியவில்லை. இதற்கு என்ன செய்வது வீட்டில் பெரியவர்களிடம் கேட்டுப்படியுங்கள். பாடசாலையில் நண்பர்களிடமும், ஆசிரியர்களிடமும் சந்தேகத்தைக் கேளுங்கள். பலவீனமாக உணரும் பாடங்களுக்கு அதிகநேரம் ஒதுக்கிப் படியுங்கள். ஒரே பாடத்தை நாள்முழுவதும் தொடர்ந்து படிக்காமல், இடைவெளி விட்டு மற்றைய பாடங்களையும் கலந்து படிப்பது - கிரகிக்கும் திறனை அதிகரிக்கும்.



நீங்கள் சோர்வாக இருந்தால், நல்ல உணவினைச் சாப்பிடுங்கள். உணவு உங்கள் படிப்புடன் நேரடியாக சம்பந்தப்பட்ட விடயம். அதனால் அதனை ஒதுக்காதீர்கள். தலைவலி அடிக்கடி வந்தால் கண்பரிசோதனை செய்யுங்கள். இவ்வாறு எப்படி உங்களுடைய பலவீனத்தை பலமாக்கலாம் என்று சிந்தியுங்கள். இப்போது உங்களுடைய பலம் பலவீனத்தை நீங்கள் புரிந்துகொண்டிருப்பீர்கள். இல்லையா? அடுத்ததாக நீங்கள் கவனிக்க வேண்டியது நேரத்தை. அதை நீங்கள் உபயோகப்படுத்தலாம். அல்லது வீணடிக்கலாம். நீங்கள் எவ்வளவு நேரம் படிக்கிறீர்கள் என்பதைவிட, எவ்வளவு கவனம் செலுத்தி முழு ஈடுபாடோடு படிக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்.

எப்போது படித்தாலும், எவ்வளவு நேரம் படித்தாலும் ஆழ்ந்து படியுங்கள். விரும்பிப் படியுங்கள், உங்களுக்காகப் படியுங்கள் அதுதான் முக்கியம். நேரத்தை எப்படி சிறப்பாக கற்பதற்கு பயன்படுத்துவது? அடுத்த வாரம் வரை பொறுத்திருங்கள்.

பாசமுடன் - சாரு அக்கா

## தேசியப் பறவை ~ நாடுகள்

| தேசியப் பறவை | | நாடுகள் |
|---|---|---|
| கழுகு | ~ | அமெரிக்கா |
| நீலக் கொக்கு | ~ | தென்னாபிரிக்கா |
| வெள்ளைக் கொக்கு | ~ | ஜேர்மனி |
| வாத்து | ~ | கனடா |
| வானம்பாடி | ~ | டென்மார்க் |
| மயில் | ~ | இந்தியா |

ஜெ.ஜெயக்கமலன் தரம் ~6 யா/ மகாஜனக் கல்லூரி

## பாட்டு

'ஆ' சொல்லித் தந்தார் எங்கள் அருமையான அம்மா
பேனா, பென்சில் வாங்கித் தந்தார் அருமையான அப்பா
பழைய நல்ல கதைகள் எல்லாம் பாட்டி சொல்லித் தந்தார்
உழைக்க வேண்டும் எறும்புபோல தாத்தா நீதி சொன்னார்
பட்டம், பலூன் வாங்கித் தந்தார் எங்கள் பாலு மாமா
விட்டேனா பார் இந்தா மிட்டாய் என்று தந்தார் மாமி

ச.சக்திதாரணி தரம் ~ 1
தமிழ் கந்தையா வித்தியாசாலை.

## நெருப்பு



நெருப்பு என்பது ஓர் இயற்கை சக்தி. மனிதன், தான் தோன்றிய காலத்திலிருந்தே, இடி விழுந்து தீப்பற்றிய மரத்திலிருந்தோ, தீ கக்கும் எரிமலையிலிருந்தோ, உராய்வால் பற்றிக் கொள்ளும் மூங்கில் காடுகளிலிருந்தோ, தீயையும் அதன் வெப்ப வெளிச்ச தன்மையும் அறிந்திருந்தான். குளிரைப் போக்கவும், காட்டு விலங்குகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்ளவும், உணவு சமைககவும், தீயைப் பயன்படுத்தத் தெரிந்த மனிதனுக்கு அதனைப் பாதுகாத்து வைக்கவோ, உண்டுபண்ணவோ அப்போது தெரியவில்லை. கண்டுபிடித்த தீயை முடிந்தவரை அணையாமல் பாதுகாத்தனர். ஆனால், இப்பொழுது தீ நெருப்புப்பெட்டி வடிவங்களில் கிடைக்கிறது.

நெருப்பு மனித வாழ்க்கைக்கு இன்றியமையாததாலும், தீ மூட்டுவது அந்தக் காலத்தில் கடினமாக இருந்தாலும் 'தீ' தெய்வமாகப் போற்றப்பட்டது. பழங் காலத்தில் இப்போது உள்ளதுபோல் மின்விளக்குகள் இல்லை. நீண்ட குச்சிகளின் உச்சியில் கந்தைத் துணிகளை எரித்து, மஞ்சள் நிற ஒளிவிடும் தீப்பந்தம் செய்து, ஓரிடத்திலிருந்து வேறிடம் கொண்டு சென்றனர். அவற்றைச் சுவர்களில் ஊன்றி வைத்து, ஊர்களுக்கு வெளிச்சம் தந்தனர். 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு இத்தகைய தீப்பந்தங்களே தெருவிளக்காகப் பயன்பட்டன.

மட்பாண்டம் செய்யும் முன்னரே, ஆதிகால மக்கள் சூடான கல்லின்மீது பொருட்களை வைத்து, சமைத்து உண்டனர். நம் முன்னோர்களின் 'தீக்கருவிகள்' சிக்கிமுக்கி கல்லும், கந்தகக் கல்லும்தான்! இவை வேகமாக கடினப்பொருட்களுடன் மோதும்போது, தீ உண்டாகிறது. புதுக் கற்கால மனிதர்கள் - பொருட்கள் வேகமாக உரசினால் வெப்பமும், வெளிச்சமும் உண்டாவதை அறிந்தனர். எனவே, வேகமாக மரத்தை கடைந்தோ, அறுத்தோ, தேய்த்தோ நெருப்பை உண்டாக்கினர். இதற்காக, ஒரு கடினமான மரத்துண்டில் குழி செய்து, அதில் குச்சி போன்ற நீண்ட மிருதுவான மரத்துண்டை வைத்து, வேகமாகக் கடைந்து தீ உண்டாக்கினர். இதுவே 'தீக்கடைக்கோல்' முறை எனப்பட்டது.

தீயை மனிதன் பல வகைகளில் பயன்படுத்தினாலும் 'லவாய்சியர்' - என்ற பிராஞ்சு விஞ்ஞானி ஒக்ஸிஜன் என்ற வாயுவின் பண்புகளைக் கண்டுபிடித்த பின்னரே தீயின் முழுப்பெருமையும், தன்மைகளும் மக்களுக்குத் தெரிய வந்தது. தீ 'இரசாயன ஆற்றலின்' வெளிப்பாடு. ஒரு பொருளுடன் ஒக்ஸிஜன் இணைந்து இரசாயன மாற்றமடைந்து தீயாகின்றது. வெப்பமும் வெளிச்சமுமே தீயாகும்.

## தெரிந்து கொள்ளுங்கள்

❖ பூமியின் ஓரிடத்திலிருந்து நேராகப் புறப்பட்டு நடந்து கொண்டே இருக்க வேண்டும். அப்படியே நேராக 40 ஆயிரத்து 77 கிலோமீட்டர் தூரம் சென்றால், மீண்டும் புறப்பட்ட இடத்துக்கே வந்து சேர்ந்துவிடலாம். ஆம், பூமியின் பூமத்தியரேகை வட்டச் சுற்றளவு 40,077 கி.மீ.

❖ இங்கிலாந்தின் கொலம்பியாவைச் சேர்ந்த 'க்வாக்யூ' இனைப் பழங்குடியினர் தங்கள் பெயரை அடகு வைத்துத்தான் கடன் வாங்குவார்கள். கடனைத் திருப்பித் தரும்வரை பெயர் இல்லாமலே இருப்பார்கள். பெயரை யாராவது கேட்டாலும் சொல்லமாட்டார்கள்.

❖ சாதாரண மழைத்துளியின் எடை 0.2 கிராம். ஒரு வினாடிக்கு 13 அடி வேகத்தில் விழுகிறது. பெரிய மழைத்துளியே வினாடிக்கு 25 அடி வேகத்தில் விழுகிறது. கோடையில் விழும் மழைத்துளிகள், மழை காலத்தில் விழும் மழைத்துளிகளை விட அளவில் பெரியவை.

❖ வைரம், வைடூரியம், மரகதம், மாணிக்கம், நீலம், புஷ்பராகம், கோமேதகம், முத்து, பவளம் ஆகியவை நவரத்தினங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

❖ சிறுத்தைப்புலி அதிவேகமாக ஓடும். மணிக்கு 100 கி.மீ வேத்தில் ஓடும். ஆனால், சிலநூறு மீற்றர்களிலேயே களைத்துப்போய், அதன் வேகம் தடைப்பட்டுவிடும். அதேநேரம், புள்ளிமான்கள் 70 கி.மீ வேகத்தில் சுமார் ஐந்து முதல ஆறு கி.மீ தூரம்வரை தொடர்ந்து ஓடக்கூடியவை.

❖ நீர்வாழ் உயிரினங்களில் செயில்ஃபிஷ் எனப்படும் மீன்கள் மணிக்கு 96 கி.மீ வேகத்தில் நீந்தும். டால்ஃபின்கள் கிட்டத்தட்ட 60 கி.மீ வேகத்தில் நீரில் நீந்துகின்றன. ❖

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருநெல்வேலி முத்துத்தம்பி சைவச் சிறுவர் இல்ல, இனுவில் ஆண்கள் விடுதிக்கான அத்திவாரக்கல்லை ஆறு.திருமுருகன் நட்டு வைப்பதைப் படத்தில் காணலாம். (111)

## யாழ். மாவட்டத்தில்
# நியாப் திட்டப்பணிகளுக்காக 29 மில்லியன் ரூபா ஒதுக்கீடு

நியாப் திட்டத்திற்கு இந்த வருடம் பதின்மூன்று குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளதுடன், நீர் தடுப்பணைகளும் அமைப்பதற்கு 290 லட்சத்து 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி சாவகச்சேரி பிரதேசத்தில் சந்திரகிராய்குளம் 18 லட்சத்து 87 ஆயிரம் ரூபா செலவிலும், நுணாவில் குளம் 9 லட்சத்து 90 ஆயிரம் ரூபா செலவிலும், கொள்ளன் கிராய்குளம் 10 லட்சத்து 70 ஆயிரம் ரூபா செலவிலும், கோம்பையன் கிராய்குளம் 30 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இதேபோன்று, கோப்பாயில் கூனிக் களி வெள்ளத் தடுப்பணை 18 லட்சதது 50 ஆயிரம் ரூபா செலவிலும், உச்சிவில்குளம் 5 லட்சம் ரூபா செலவிலும், வாதரவத்தைக் குளம் 20 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

சங்கானையில் நாவியா சுட்டகுளம் 13 லட்சம் ரூபா செலவிலும், நெடுந்தீவு வெட்டுக்களிகுளம் 46 லட்சம் ரூபா செலவிலும், ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனைகுளம் 35 லட்சம் ரூபா செலவிலும், மணியம் வாய்க்கால் 36 லட்சம் ரூபா செலவிலும், கொக்குவில் நந்தாவில் வாய்க்கால் 33 லட்சம் ரூபா செலவிலும் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தப் புனரமைப்பு பணிகள் அனைத்தும் தற்போது ஆரம்பித்திருப்பதாகவும், புனரமைப்பு பணிகள் அனைத்தும் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாத இறுதிக்குள் முடிவடையும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால், விவசாயிகளும், மக்களும் பெரும் பயன்பெறுவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

### ஊர்காவற்றுறைபிரதேச ஒருங்கிணைப்புக்குழு கூட்டம்

(சுதுமலை)

ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ். செல்வநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம், சுகாதாரம், மின்சாரம், நீர் விநியோகம், கல்வி அபிவிருத்தி தொடர்பாக பல முக்கியமான தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (91)

### வீதிப் புனரமைப்பு

நீண்ட காலமாக புனரமைக்கப்படாதிருந்த சுன்னாகம் மாகியப்பிட்டி வீதி, தற்போது புனரமைக்கப்பட்டு வருகிறது. இந்த வீதியை தினமும் பாவிக்கும் பொது மக்களினால் கொடுக்கப்பட்ட நெருக்குதலை அடுத்தே, இந்த வீதிப் புனரமைப்பை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டு வருகிறது.

தினமும் இந்த வீதியால் பாடசாலை மாணவர்கள், விவசாயிகள், அரச உத்தியோகத்தர்கள் எனப் பல தரப்பட்ட பொதுமக்களும் போக்குவரத்துச் செய்கின்றமை குறிப்பிடத்தக்கது. (94)

## காணாமற்போனதாக
# முறைப்பாடு செய்யப்பட்டவர் நீதிமன்றினால் விடுதலை

நெல்லியடிப் பகுதியில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்ட நபர் காணாமற்போயிருப்பதாக யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் கடந்த திங்கட்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த நபர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டார்.

நெல்லியடியைச் சேர்ந்த கந்தசாமி சிறிவிஜயன் என்பவரையே காணவில்லையென மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டது.

இந்த முறைப்பாடு தொடர்பாக நெல்லியடிப் பொலிஸாரை விசாரணை செய்தபோது - ஆமை கொண்டு வந்ததற்காக குறிப்பிட்ட நபரைக் கைதுசெய்து நீதிமன்றில் ஆஜர்படுத்தியதாகவும், இது தொடர்பாக இவரது குடும்பத்துக்கு தாம் அறிவிக்கவில்லையெனவும் தெரிவித்தனர்.

இந்த நபர் நேற்று முன்தினம் நீதிமன்றினால் விடுதலை செய்யப்பட்டு, வீடு திரும்பினார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஜனசக்தியில் சேமித்த பணம் மீளப்பெற முடியவில்லை
## மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு

கிளிநொச்சிப் பகுதியில் அரசாங்கத்தினால் ஜனசக்தி திட்டத்தின் கீழ் 1990ஆம் ஆண்டு காலப் பகுதியில் வழங்கப்பட்ட நிதியில் தாம் வங்கிகளில் சேமித்த பணத்தை மீளப் பெறமுடியாதிருப்பதாக யாழ். மனித உரிமை ஆணைக் குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பூநகரி வேராவில் பகுதிகளை சேர்ந்த 110 இற்கு மேற்பட்ட மக்கள் கையொப்பமிட்டு இந்த முறைப்பாட்டைச் செய்தனர்.

வறிய மக்களுக்கு உதவும் நோக்குடன் ஜனசக்தி என்னும் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடும்பத்திற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபா 1042 கொடுக்கப்பட்டது.

இவர்களின் எதிர்கால நன்மை கருதி ரூபா 456 வங்கிகளில் சேமிக்கப்பட்டது. இவர்களின் வங்கிப் புத்தகத்தில் இதற்கான முத்திரை குத்தப்பட்டது.

எவ்வாறாயினும், இவர்கள் நீண்ட காலமாக சேமித்த பணத்தினை மீளப் பெறமுடியாது உள்ளது என தெரிவித்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக யாழ். மனித உரிமை ஆணைக்குழு இணைப்பாளர் தற்போதுள்ள சமுர்த்தி அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு சம்பவம் தொடர்பாக பேசவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

### வடமராட்சி முன்பள்ளிகளின் கண்காட்சி

(வடமராட்சி)

வடமராட்சி வலய முன்பள்ளிகளின் கண்காட்சி இன்றும், நாளையும் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிவனேசன் பிரதமவிருந்தினராகவும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ். இராசையா, மேலதிக அரசாங்க அதிபர் சிவசாமி, யாழ். மாவட்ட முன்பள்ளி நிறுவன ஒருங்கிணைப்பாளர் கே.கணேசலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (17)

# உள்ளூராட்சி வாரத்தையொட்டி சுகாதார செயற்திறன் போட்டிகள்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி சுகாதாரம் மற்றும் செயற்திறன் சார்ந்த போட்டிகளை நடத்துவதென நல்லூர் பிரதேச சபை தீர்மானித்திருப்பதாக நல்லூர் பிரதேசசபைச் செயலர் தெரிவித்தார்.

எதிர்வரும் யூலை மாதம் 12ஆம் திகதி முதல் 18ஆம் திகதிவரை இடம்பெறவுள்ள, உள்ளூராட்சி வாரத்தையொட்டியே இந்தப் போட்டிகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட தேநீர்க்கடைகள் மத்தியில் சுகாதாரம் பேணும் போட்டி நடத்தப்பட்டு, சிறந்த சுகாதாரம் பேணும் கடைகளுக்கு பரிசில்கள் வழங்கப்படுவதுடன், சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் மத்தியில் செயற்திறன்சார்ந்த போட்டிகளையும் நடத்தவுள்ளது.

இது தொடர்பான கூட்டம் ஒன்று நேற்று பிற்பகல் மூன்று மணியளவில் நல்லூர்ப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது. அதில் டெங்கு பரவாது தடுப்பது, சுகாதாரத்தைப் பேணல், கட்டாக்காலி நாய்களை ஒழிப்பது போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டுள்ளது. (ப)

# செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொள்ளக் கோரிக்கை

கீழே பெயர் குறிப்பிடப்பட்டோரை அருகிலுள்ள செஞ்சிலு வைச்சங்க சர்வதேசக்குழுவின் காரியாலயத்துடன் சனி, ஞாயிறு, பொதுவிடுமுறை நாட்கள் தவிர்த்து, ஏனைய நாட்களில் தொடர்புகொள்ளுமாறு கோரப்பட்டுள்ளது.

சு. சிறீஸ்கந்தராசா, புதுக்குடியிருப்பு. அ. செல்வராணி, (தர்மபுரம்). கதிரிப்பிள்ளை நாகராசா, (கிளிநொச்சி). பிலோமினா புஸ்பம், (புதுக்குடியிருப்பு). பு. மஞ்சுளாதேவி, (மறவன்குளம்). க. மகேசன், (கனகபுரம்). ச. ஈஸ்வரதேவி, (மாத்தளன்). ச. நிவேதினி, (கோணாவில்), அ. சிறீநந்தினி, (கொம்புவில், புதுக்குடியிருப்பு). ப. கிருபாம்பாள் விலங்கு விஞ்ஞானப் பிரிவு, விவசாய பீடம், (கிளிநொச்சி).

மோகன அகிலன் ஆன் ஜுலியட், (கிளிநொச்சி). சி. சரோஜா, (பூந்தோட்டம் இடம்பெயர்ந்தோர் நிலையம், வவுனியா). அருணாசலம் பெருமாள் (யூனியன்குளம், கிளிநொச்சி). கு. அன்னலட்சுமி, (அக்கராயன்). இ.மல்லிகாதேவி, (கண்ணகிபுரம், ஸ்கந்தபுரம்). ந. சிந்தாமணி, (ஆனைவிழுந்தான், கிளிநொச்சி). த.பரமேஸ்வரி, (கோணாவில், கிளிநொச்சி). டானியல் சந்திரா, (உருத்திரபுரம்). ரவிராஜேஸ்வரி, (202/4 தர்மபுரம் மேற்கு). க.சிவகலா, (ஆரோக்கியபுரம், அக்கராயன்). ஆ.ஆனந்தபவானி, (கெற்பப்பிளவு, முல்லைத் தீவு). க.தேவி, (கருடர்மடு, ஒட்டிசுட்டான்).

### சமகால அரசியற் கருத்தரங்கு

தமிழீழ மாணவர் பேரவையினால் நடத்தப்படும் சமகால அரசியல் கருத்தரங்கின் 11ஆவது தொடர், எதிர்வரும் 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் "ஈழவிடுதலைப் போராட்டமும், எதிரான ஊடகங்களின் உளவியல் யுத்தமும்" எனும் விடயம் தொடர்பாக எஸ்ராதேயன் கருத்துரை வழங்கவுள்ளார்.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : வி.ஸதுர்ஸா
முகவரி : கங்காதரன் குடியிருப்பு அக்கராயன் குளம்

வாழ்க வளமுடன்
சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்


# குவைத்திலிருந்து பணிப் பெண்களை அழைத்துவருவதற்கு நடவடிக்கை

குவைத் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைந்திருந்த 105 இலங்கைப் பணிப்பெண்களை இலங்கைக்குத் திருப்பி அழைப்பதற்கு வேலை வாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இதன்படி 46 பணிப் பெண்கள் இன்றும், ஏனையவர்கள் நாளை மறுதினமும் அழைத்துவரப் படவுள்ளனர்.

குவைத் நாட்டில் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கும் பணிப் பெண்கள் நலன்புரி நிலையங்களில் தஞ்சமடைவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அச்சுவேலி விபத்தில் இளைஞன் படுகாயம்!

(வடமராட்சி)

வேகமாகச் சென்ற ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில், மோட்டார் சைக்கிளில் சென்ற இளம் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது-

நேற்றுமுன்தினம் இரவு 9 மணியளவில் அச்சுவேலி நகரப் பகுதியில் வேகமாகச் சென்ற ஓட்டோவும், மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக்கொண்டன. இந்தச் சம்பவத்தில் அச்சுவேலி - தோப்பு என்ற முகவரியைச் சேர்ந்த இளம் குடும்பஸ்தரான நல்லையா விஷ்ணுகுமார் என்பவர் தலையில் படுகாயமடைந்தார்.

படுகாயமடைந்த இவர் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

### சுன்னாகம் - சாவகச்சேரி மினிபஸ் சேவை ஆரம்பம்

சுன்னாகம் புன்னாலைக்கட்டுவன் நிலாவரை புத்தூர் மட்டுவில் கனகம்புளியடி ஊடாக சாவகச்சேரி செல்லும் மக்களின் நலன் கருதி 775ஆம் இலக்க பாதையூடாக மினி பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சுன்னாகத்திலிருந்து சாவகச்சேரிக்கான சேவை காலை 7.15 இற்கு ஆரம்பமாகித் தொடர்ந்து 9.15, 11.45, 2.30, 4.00 ஆகிய நேரங்களுக்கும் சாவகச்சேரியிலிருந்து சுன்னாகத்திற்கான சேவை காலை 7.15 இற்கு ஆரம்பமாகி 9.00, 11.40, 2.30, 3.45, 5.25, வரை நடைபெறும்.

# அளவெட்டி வடக்குப் பகுதியில் எழுச்சிப் பேரவையின் கூட்டம்

(அளவெட்டி)

அளவெட்டி வடக்கு தேசிய எழுச்சிப் பேரவையினருக்கும், பொது மக்களுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நாளை மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது. அளவெட்டி வடக்கு ஞானவைரவர் சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ள இந்தக் கலந்துரையாடலில் தேசிய எழுச்சிப் பேரவையினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் கிராமிய மட்ட செயற்றிட்டங்கள் தொடர்பாக ஆராயப்படவுள்ளதுடன், பொது மக்களின் கருத்துக்களும் அறியப்படவுள்ளன.

கடந்த கால போர் நடவடிக்கைகளின்போது பாதிப்புக்குள்ளானோரினது விபரங்கள் சேகரிப்பும், நியாப் திட்டம் மூலமாக கிராம மட்டங்களில் மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்திப் பணிகள் தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளதாக அளவெட்டி வடக்கு தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் க.வீரசிங்கம் தெரிவித்தார். (94)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாரநோக்கு... - யாழவன்


நிலாவினி


பிரேமினி


லாவண்யா


தந்தமிழ்

# சிங்களத் தலைமைகளின் சுயத்தை இனங்காட்டிவரும் 'கருணா'வின் கதையின் புதிய அத்தியாயங்கள்...!

கடந்தவார முற்பகுதியில், அண்மைக் காலமாக பலரது கவனத்தையும் ஈர்த்த கருணா விவகாரம் தொடர்பான பல உண்மை நிலைகள் கருணாவுடன் சேர்ந்து இயங்கி தற்போது அவரை விட்டு விலகியுள்ள சிலர் மூலமாக வெளிவந்துள்ளன. விடுதலைப்புலிகள் அமைப்பின் மிக முக்கிய பொறுப்புக்களில் இருந்து பின்னர் சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் கருணாவின் துரோகத்தனத்துக்கு பலிக் கடாவாகி அதற்கு துணை போய், அதன் வழியாக பல இன்னல்களை அனுபவித்த நான்கு பெண்கள் மீண்டும் விடுதலைப் புலிகளுடன் இணைந்துள்ளமை மூலமாக கருணாவிடயம் தொடர்பாக பல புதிய தகவல்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாகவிருந்தது.

ஆனால், விடுதலைப்புலிகளைப் பொறுத்த வரையிலே இப்பெண்கள் தெரிவித்த கருத்துக்களானவை ஒன்றும் புதியவையல்ல. மிகவும் பலமான மதிநுட்பம் வாய்ந்த புலனாய்வு துறையொன்றை கொண்டுள்ள புலிகள் இது தொடர்பான தகவல்களை ஏற்கனவே வெளியிட்டிருந்தனர்.

கருணாவுக்கும் அவரது துரோகத்தனமான செயற்பாட்டுக்கும் இலங்கை இராணுவத்தினரின் புலனாய்வு பிரிவினர் துணை நிற்பதுடன் கருணா முழுமையான இராணுவ பாதுகாப்பிலேயே தங்கவைக்கப்பட்டுள்ளார். இது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயற்பாடாகும். இதனால் பாரதூரமான பின் விளைவுகளை அரசு சந்திக்க நேரிடும் என்று புலிகள் ஏற்கனவே ஒரு எச்சரிக்கை அறிவிப்பை விடுத்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

விடுதலைப்புலிகள் சில தினங்களுக்கு முன்னர் வெளியிட்ட கருத்தானது தற்போது ஓரளவு ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது. இது இலங்கை அரசின் நம்பகத் தன்மையை புலிகள் எந்தளவிற்கு எடைபோட்டு வைத்துள்ளார்கள் என்பதை நன்கு புலப்படுத்துகிறது. ஆனால், இன்று வரை இராணுவத்தினருக்கும் கருணாவுக்கும் இவரது செயற்பாட்டுக்கும் இடையில் எந்த விதமான தொடர்புகளும் இல்லையென்றே அரசு அடுத்தடுத்து கூறிவருகிறது.

கருணாவுக்கு இலங்கை இராணுவத்தினரின் புலனாய்வு பிரிவினரே பாதுகாப்பு வழங்குதாக நேரில் கண்ட சாட்சிகள் நம்பத் தகுந்த முறையிலே அதனை ஆதாரப்படுத்தும் போது இலங்கை அரசு இவ்வுண்மையை இன்றுவரை இருட்டடிப்புச் செய்து வருவது வேடிக்கையான விடயம். அரசு இவ்வாறு நடந்து கொள்வதன் மர்மம், சமாதான நகர்வு மீது தான் வைத்துள்ள போலி நம்பிக்கையானது அவநம்பிக்கையாகி சமாதான விரும்பிகளுக்கு தெரிந்து


அலிசாகிர் மௌலானா

விடக்கூடாது என்பதற்காகவேயன்றி வேறெதற்காகவுமில்லை.

ஒரு சமயம் அரசு இன்றுவரை கூறுவது போல கருணாவுக்கும், இராணுவத்துக்கும் தொடர்பு இல்லையாயின் இரு மாதங்களாக கொழும்பில் தங்கியிருக்கும் கருணாவுக்கு துணைபுரிவது யார்? ஏதாவது மூன்றாவது சக்தியினுடைய தலையீடு அதிலேயுள்ளதா? இவ்வாறானதொரு நிலைமை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையமாட்டாதா?

அல்லது போனால், விடுதலைப் புலிகளின் தலைமைக்கு கட்டுப்பட்டு இயங்காமல் பெருந்தவறு இழைத்த கருணாவைப் போல இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு பொறுப்பான, அடிக்கடி கருணாவுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளும் இராணுவ அதிகாரியும் அரசினதும் இராணுவ தளபதியினதும் கட்டளைகளுக்கு கீழ் படியாது தன்னிச்சையாக செயற்படுகின்றாரா? என அடுத்தடுத்து கேள்விகள் எழுகின்றன.

ஒருவேளை அரசுக்கு தெரியாமலேயே அதுவும் குறிப்பாக இலங்கை இராணுவத்துக்குத் தெரியாமல், மாற்று போட்டி தீவிரவாத அமைப்பொன்றின் முன்னாள் முக்கியஸ்தர் தலைநகர் கொழும்பிலே தங்கி வாழ முடியுமெனின் பாதுகாப்பு ஏற்பாடுகள் எனும் போர்வையில் கீழ் அரசு மேற்கொள்ளும் தீவிர சோதனை நடவடிக்கைளின் பலன்தான் எத்தகையது? இது சிந்திக்க வேண்டிய விடயமாகும்.

கருணா தப்புவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் அலிசாகிர் மௌலானா உதவி புரிந்துள்ளார். இந்த உதவியானது ஐக்கிய தேசியக் கட்சி தலைமைப் பீடத்துக்கு தெரியாமல் மேற்கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்படுவதால் அது இன்று கட்சிக்கும் அதன் மதிப்புக்கும் உபத்திரவமாக அமைந்துவிட்டது. இதனால் அலிசாகிர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டிட நிர்ப்பந்திக்கப்பட்டமையும் ஐக்கிய தேசியக் கட்சி மன்னிப்புக் கோரவேண்டிய சூழ்நிலையும் எற்பட்டுள்ளது.

தற்பொழுதும் தொடர்ந்தும் ஐக்கிய தேசியக் கட்சியே ஆட்சி அமைந்திருந்து இத்தகையதொரு நிலை தோன்றியிருக்குமாயின் அதன் விளைவுகள் பாரதுமானவையாக இருந்திருக்கலாம். கருணாவுக்கு தனது கட்சி உறுப்பினர் ஒருவர் தனிப்பட்ட உறவு முறை காரணமாக உதவி புரிந்தமையையே பாரதூரமான விடயமாக பார்த்து, போர் நிறுத்த உடன்பாட்டை கவனத்தில் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சி செயற்பட்டுள்ளமையை நிச்சயமாக பாராட்டியே ஆகவேண்டும். ஆனால், அது கூறுவது போல இந்த விடயத்திலே கட்சிக்கும் கருணாவுக்கும் இடையிலே எதுவித தொடர்புகளும் பேணப்படாமலிருக்கும் போதே இந்த மன்னிப்பு கோருகையானது மகத்தான வரவேற்பைப் பெறும்.

அலிசாகிர் மௌலானா கூறுவது போல் கருணாவுக்கும் தனக்கும் சிறு பாராயத்திலிருந்த நட்புணர்வு காரணமாகவே தான் உதவி புரிந்ததாக இருந்தால் தனிப்பட்ட ரீதியிலே உதவி புரிந்த ஒருவருக்கு எப்படி சிவிலுடையிலான ஆயுத தாரிகள் துணைக்கு கிடைத்தனர். இந்த ஆயுத தாரிகள் இராணுவத்தினரின் ஒரு படைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் எனின் இராணுவம் எப்போது "எடுப்பார் கைப்பிள்ளையாக" மாறியது.

ஒரு கட்சி சார்ந்த ஒருவர் பாதுகாப்பு அமைச்சராக பதவியேற்கும் போது இன்னொரு கட்சி சார்ந்தவர் எப்படி இராணுவத்தினரை தனது தனிப்பட்ட வேலைகளுக்காக பாவிபதற்கு அனுமதி இலகுவாக கிடைதது. இதுவும் ஆராயப்பட வேண்டிய விடயம்.

மேலும் கருணா கொழும்பிலே உள்ள நாட்கள் அத்தனையிலும் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அவருடன் (கருணாவுடன்) தொடர்புகளை பேணிவந்துள்ளார். கருணா கொழும்பிலே வந்து தங்கியுள்ள விடயம், தொலைபேசி இலக்கம் எவ்வாறு அவருக்கு கிடைத்தன. கருணாவாக வலிந்து தொடர்புகளை ஏற்படுத்தியிருப்பின், நிச்சயமாக கருணா டக்ளஸினுடைய கோரிக்கையை ஏற்று கொண்டிருப்பார். எனவே, டக்ளஸ் தேவானந்தாவே வலிந்து கருணாவுடன் தொடர்புகளை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதிலிருந்து கருணா கொழும்பிலே தங்கியிருந்தாக அரசுக்கே மர்மமானதாகவுள்ள போது எவ்வாறு டக்ளஸ் அறிந்து கொண்டார்? என்ற வினாவும் இயல்பாகவே எழுகின்றது.

இந்த வினாக்களின் விடைகளை விரிவாக ஆராய்ந்தால் அத்தனை விடயங்களுக்கும் அரசுக்கும் நெருங்கிய தொடர்பொன்று இருப்பது புலனாகும். இது தற்போதைய சூழ்நிலையில் ஆரோக்கியமான அரசியல் ஸ்திரத்தன்மைக்கு ஏதுவான காரணியாக அமையமுடியாது எனவே அரசு இனி வரும் நாட்களிலாவது, தவறுகளை திருத்தி ஆட்சி அமைக்க வேண்டும். இது நாட்டை நல்லவழிக்கு உயர்த்திச் செய்யும் காரணியாகும்.

ஒருவேளை டக்ளஸின் கோரிக்கையை கருணா ஏற்றுக் கொண்டு அவருடன் இணைந்து செயற்பட ஆரம்பித்திருப்பின் அது விடயமானது "குருடும் குருடும் சேர்ந்து குருட்டாட்டம் ஆடி குப்புற விழுந்த கதையாக" முடிந்துவிடும். எலி தான போகக்காணாது விளக்கு மாற்றையும் சேர்த்து தூக்கிய கதையாக டக்ளஸின் கதை மாறியிருக்கும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் இதய சுத்தியானது வெளிப்பட்டுள்ள நேரத்தைப் போல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பலவித நிகழ்வுகளை மறந்து தனது இதயசுத்தியை வெளிபபடுத்த வேண்டும் இது காலத்தின் கட்டாய தேவைப்பாடாகும்.

**ஒரு சமயம் அரசு இன்றுவரை கூறுவது போல கருணாவுக்கும், இராணுவத்துக்கும் தொடர்பு இல்லையாயின் இரு மாதங்களாக கொழும்பில் தங்கியிருக்கும் கருணாவுக்கு துணைபுரிவது யார்? ஏதாவது மூன்றாவது சக்தியினுடைய தலையீடு அதிலேயுள்ளதா? இவ்வாறானதொரு நிலைமை நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையமாட்டாதா?**

கருணாவுக்கு அடைக்கலம் கொடுத்து அவரை காரணமாக வைத்து போரை மீள ஆரம்பிப்பதிலும் அரசு குறியாகவுள்ளது. இதற்கான ஆரம்ப கட்ட நிகழ்வுகளாகவே அரச படைகளின் அனுசரணையுடன் மட்டக்களப்பிலே தமிழ்த் தேசியத்திற்கு ஆதரவானவர்களும், விடுதலைப்புலிகள் இயக்க போராளிகளும் சுட்டுக் கொலை செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் கருணா குழுவினரால் அரசுக்கு பல நிபந்தனைகள் போடபபட்டுள்ளமையும் தற்போது வெளிவநதுள்ளது. மாதாந்தம் ஐந்தரை கோடி ரூபாவை அரசிடம் கோரியதுடன் மட்டக்களப்பிலே மேலும் இராணுவ முகாம்களை அமைக்கும்படியும் அங்கு ஆயுதத்துடன் நடமாட தம்மை அனுமதிக்கும்படியும் கோரிக்கை விடுத்துள்ளார். இவற்றுக்கு இணங்கிப் போவது அரசினது முட்டாள் தனமாகவே இருக்கும்.

[illegible] ஜனாதிபதி ஒரு சமயம் ஊடகங்களுக்கு ஒன்றை நிதானமாக தெளிவுபடுத்தியிருந்தார். அதாவது கருணா தம்மிடம் உதவி கோரியதாகவும் தாம் கருணாவுக்கு உதவி புரிவதானது சமாதான நடவடிக்கைகளை பாதிப்படையச் செய்யுமென்பதால் உதவி வழங்க முன்வரவில்லை. அவரது கோரிக்கையை உடனடியாகவே மறுத்து விட்டதாக தெரிவித்திருந்தார்.

**ஆனால், கருணாவின் பிடியிலிருந்து தப்பி வந்தோர் கூறுவதை வைத்து பார்க்கும் போது கருணா சதா இராணுவத்தினரின் உளவுப் பிரிவினரின் பாதுகாப்புடனேயே உலாவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. எனவே, பாதுகாப்பு அமைச்சராகவும், இராணுவத்தினரின் மூன்று பிரிவினருக்கும் அதாவது தரைப்படை, விமானப்படை, கடற்படை ஆகியோருக்கு கட்டளையிடும் அதிகாரமுள்ளவராகவும் தற்போது கடமையாற்றிவரும் ஜனாதிபதி கருணாவுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளாரா? அல்லது ஜனாதிபதியே இராணுவத்தினர் தெரியாமல் கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனரா? என்பது வியப்பாகவேயுள்ளது.**

ஆனால், கருணாவின் பிடியிலிருந்து தப்பி வந்தோர் கூறுவதை வைத்து பார்க்கும் போது கருணா சதா இராணுவத்தினரின் உளவுப் பிரிவினரின் பாதுகாப்புடனேயே உலாவி வருவதாக தெரிவிக்கப்படுகிறது எனவே, பாதுகாப்பு அமைச்சராகவும், இராணுவத்தினரின் மூன்று பிரிவினருக்கும் அதாவது தரைப்படை, விமானப் படை, கடற்படை ஆகியோருக்கு கட்டளையிடும் அதிகார முள்ளவராகவும் தற்போது கடமையாற்றிவரும் ஜனாதிபதி கருணாவுக்கு பாதுகாப்பு அளிக்கும்படி இராணுவத்துக்கு உத்தரவிட்டுள்ளாரா? அல்லது இராணுவத்தினர் ஜனாதிபதிக்கு தெரியாமல் கருணாவுக்கு பாதுகாப்பு வழங்கி வருகின்றனரா? என்பது வியப்பாகவேயுள்ளது.

மேலும் கருணா தனது பாதுகாப்பிலிருந்தவர்களை எதுவித தடைகளையும் ஏற்படுத்தாது இலகுவாக தப்பியோட வைத்துள்ளார். இந்த நிகழ்வுக்கு பின்னாலும் பல செய்திகள் புதைந்து கிடக்கலாம். கருணாவின் இருப்பிடத்திலே தங்க வைக்கப்பட்டிருந்த இந்த நான்கு பேரும் தப்பியோடி மீண்டும் புலிகளுடன் இணைந்துள்ளமையால் கருணா எங்கு இருந்தார். என்ற தகவல்கள் துல்லியமாக அறியப்பட்டுள்ளன. இதனை வைத்துக் கொண்டு பலமான மேலதிக நடவடிக்கைகளை, நகர்வுகளை புலிகளால் மேற்கொள்ள முடியும்.

ஆனால் கருணா தற்போதைய சூழ்நிலையில் பெரும்பாலும் கொழும்பிலே தங்கியிருப்பதற்கான வாய்ப்புக்கள் அரிதாகவேயுள்ளன. அவரது இருப்பிடம் அண்மையான நாட்கள் வரை அவரோடு உடனிருந்தவர்களால் வெளிப்படுத்தப்பட்ட பின்னரும் அதே இடத்திலேயே தங்கிருக்கும் கருணா அப்படியொன்றும சாதாரணமான முட்டாள் இல்லை. எனவே கருணா அவர் கூறியது போலவே வெளிநாடு ஒன்றுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என்றே கருத வேண்டியுள்ளது.

மீண்டும் இலங்கை வந்து ஒரு கட்சியை ஆரம்பிக்க கருணா திட்டமிட்டுள்ளார். கருணாவால் ஆரம்பிக்கப்படும் கட்சியானது. தமிழ் தேசிய விடுதலைக்கான இன்னொரு நச்சு விதையாகவே முளைக்கும். ஆனால, கருணாவினது கட்சி மக்கள் ஆதரவையோ, ஆணையையே பெறுவது தென்பது மிகவும் கடினமான விடயம்.

ஏனெனில், கடந்த பொதுத் தேர்தலில் போது பழமையான நீண்ட கால அரசியல் அனுபவம், நடாளுமன்ற அனுபவம் உடைய மூத்த அரசியல் தலைவர்கள் பலரே தமிழ் மக்களினால் ஜனநாயக ரீதியாக புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்த மாத்திரத்தில் வெளிப்படையாகவே துரோகத்தனமொன்றுக்கு காரணமான கருணா எம்மாத்திரம்?

ஆனால் கருணாவையும், அவரது குழுவையும் அரசு கறிவேப்பிலை போல பாவிக்க முனையலாம் அதாவது தமது தேவையை நோக்கி மட்டும் கருணாவை பாவித்துவிட்டு பின் புறந் தள்ளி விடுவது இதற்கான சாத்தியப்பாடுகளும் உள்ளன. ஏனெனில், சமாதான நடவடிக்கைகள் இடை நடுவிலே முறிந்து மீண்டும் போர் ஆரம்பித்தால் அதனை எவ்வாறு எதிர்கொள்வது என புலிகள் ஏற்கனவே திட்டமிட்டிருந்தனர்.

இந்த திட்டமிடல் தற்போது கருணா மூலமாக இராணுவத்தினருக்கு தெரிந்திருப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. இதனாலேயே இராணுவத்தின் தமது பிரதேச ரீதியான இராணுவச் சம நிலையை பேணுவதிலே கவனம் செலுத்துவதோடு புலிகள் இராணுவ ரீதியாக குறித்த இடங்களுக்கு குறிப்பாக கிழக்கு மாகாணத்தில் பலம் பெறுவதையும் தடுப்பதோடு அவதானிப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கின் ஸ்திரத்தன்மையை குலைப்பதிலே தமிழ் விரோத ஊடகங்கள் சிலவற்றையும் அரசு நன்றாக பாவித்துக் கொண்டிருக்கிறது. மீண்டும் மீண்டும் நடுக்கடலிலேயும நாய்க்கு நக்குத் தண்ணிதான என்பது போல அரசு பலவழிகளினாலும் போர முனைப்பையே வெளிப்படுததி வருகிறது. சமாதான நகர்வுகளுக்கு அளிக்கப்படும் கனதியை விட போருக்கான முன்னேற்பாடும், திட்டமிடலுமே அதிகமாக இடம் பெற்று வருகின்றது. இதன் ஒரு படியே கருணாவிற்கான இராணுவப் பாதுகாப்பு.

ஆனாலும் தொலை நோக்குச் சிந்தனை மிக்க விடுதலைப் புலிகளும் அரசின் கபடத்தனத்தை ஏலவே தெரிந்து கொண்டவர்களாக தம்மை அரசியல் ரீதியிலே பலப்படுத்துவதோடு இராணுவ ரீதியாகவும் பலப்படுத்தி வருகின்றார்கள். புலிகள் போரா? சமாதானமா? அரசே அல்லது சமாதானத்தை தீர்மானிக்கட்டும் என அடிக்கடி கூறி வருகின்றனர். எனவே, போரை தீர மானிக்கும் சக்தியாகவுள்ள அரசு எடுக்கும் முடிவிலேயே நாட்டின் எதிர்காலம் தங்கியுள்ளது!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*நெஞ்சில் துறவார் துறந்தார்போல் வஞ்சித்து*
*வாழ்வாரில் வன்கணார் இல.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வெளிச்சத்திற்கு வரும் உண்மைகள்

கிழக்கைவிட்டுத் துரத்தப்பட்டு, தப்பியோடிய கருணா என்ற நபர் குறித்த விவகாரம் இப்போது தென்னிலங்கை அரசியலில் பெரும் சர்ச்சைக்குரிய விடயமாகிப் பலருக்கு பெரும் குழப்பத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து துரோகியாக இனங் காணப்பட்ட நிலையில், வெளியேற்றப்பட்ட கருணாவுக்கு, அவரின் தமிழின விரோதச் செயற்பாடுகள் அம்பலப்படுத்தப் படத் தொடங்கிய நாளிலிருந்தே, அவரைத் தம்வசமாக்கிக் கொள்ள, தமிழின மற்றும் சமாதான எதிர்ப்புச் சக்திகளும், இலங்கை இராணுவமும் பல்வேறு செயற்பாடுகளைத் தீவிரப் படுத்தத் தொடங்கியதை அனைவரும் அறிவர்.

தனது குற்றச்செயல்களை மூடி மறைக்க, கிழக்கு மாகாண மக்களிடையேயான தனது செல்வாக்கைத் தக்க வைத்துக்கொள்ள, தன்னைக் கிழக்கின் இரட்சகனாக இனங்காட்டி, பிரதேசவாதத்தைக் கிளறிவிட முயன்ற கருணாவின் முயற்சிகளுக்கு அரச படைகளும், அரச சார்பு ஊடகங்களும் ஒரு சில அந்நிய சக்திகளும் மறைமுகப் பேராதரவு நல்கியமையும் தெரிந்தவிடயமே.

அந்த நேரத்தில் தமிழினத்தையும், தமிழ் மண்ணையும் கூறுபோடவும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் இன ஒருமைப்பாட்டைச் சிதைக்கவும் வல்ல ஒரு அற்புதமான நாசகாரச் சக்தியாகவே இலங்கை அரசும், அந்நிய சக்திகள் சிலவும் 'கருணா'வை அடையாளம் கண்டு குதூகலித்தன.

அற்பத்தமான சுயநல அபிலாஷைகளுக்காக தன்னைத் தானே எதிரிகளின் காலடியில் அர்ப்பணிக்கும் அசிங்க நிலைக்கு வேறு எந்தவிதமான மாற்றுத்தேர்வுமற்ற நிலையில் விழ நேர்ந்தபோது அவரைத் தமது அரசியல் நலனுக்காக - மற்றும் இராணுவ உபயோகங்களுக்காகப் பயன்படுத்தும் மூலோபாயத்துடன் அரசும் - பாதுகாப்புப் படைகளும் தீவிரம் காட்டின.

இராணுவத்திற்கும் கருணாவுக்குமான தொடர்புகள் ஆரம்பததில் புளொட் மோகன் என்பவராலும், பின்னர் உயர் இராணுவ அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்பட்டவிடயம் பகிரங்கமான போது - இராணுவத்தரப்பு அதனை மறுத்து பொய்யான அறிக்கைகளையும் விட்டது.

அப்போது இராணுவத் தளபதியாக இருந்த பலகல்ல கூட கருணா உதவிகேட்டால் உதவியும், பாதுகாப்பும் வழங்கத் தயாரென வெளிப்படையாக அறிக்கைவிட்ட போதே, கருணாவின் கடைசிப் புகலிடம் எதுவாக இருக்கும் என்பது மிகவும் தெளிவான விடயமாகிவிட்டிருந்தது.

கருணாவுக்கும் படைத்தரப்பினருக்குமான உறவுகள் குறித்தும், சந்திப்புக்கள் குறித்தும் அந்தச்சமயம் பரபரப்பான செய்திகள் வெளியானபோது அரசும் படைத்தரப்பும் மறுத்தும், மௌனம் சாதித்தும் மக்களிடையே சந்தேகங்களை ஏற்படவைத்தன. கருணாவே அரசுடன் பாதுகாப்புக் கோரி, ஆயுத உதவி கோரி இராணுவத்துடன் இணைந்து செயற்பட பேரம் பேசும் முயற்சியில் தீவிரம் காட்டிய செய்திகள் அவரின் கையாலாகாத்தனத்தையும் பலவீனத்தையும் மட்டுமல்ல துரோகத்தனத்தின் உச்சத்தையும் வெளிப்படுத்தவே செய்தது.

- அதெல்லாம் முடிந்த கதை...

கருணா கிழக்கை விட்டு துரத்தப்பட்ட பின்னர் நடந்த கதைகள் கடந்த சில நாட்களாக அவருடன் கூட இருந்து தப்பி வந்தவர்களால் வெளிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தென்னிலங்கை அரசியலில் வாதப் பிரதிவாதங்கள், ஒப்புதல வாக்குமூலங்கள், காட்டிக் கொடுப்புக்கள் எனப் பல நிகழ்வுகள் நடந்தேறிவருகின்றன.

- கருணாவை ஐக்கிய தேசியக்கட்சிப் பிரமுகர் அலசாஹிர் மௌலானா தானே காப்பாற்றி இராணுவத்திடம் ஒப்படைத்ததை ஒப்புக் கொண்டபோதும், படைத்தரப்பு தமக்கு கருணாவைப் பற்றி எதுவும் தெரியாதெனக் கையை விரித்தது.

- இப்போது மங்கள சமரவீர என்ற அமைச்சரே கருணாவுக்கு இராணுவம் பாதுகாப்புக் கொடுத்ததை ஒப்புக் கொண்டு விட்டதுடன் கருணா தனது சகபாடியைக் கொல்ல இராணுவம உதவியதையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

- ஆனால் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரத்னசிறி விக்கிரமநாயக்க மறுக்கிறார்.

- இராணுவம் கருணாவுக்குப் பாதுகாப்பை வழங்குவது குறித்து தனக்கு எதுவும் தெரியாதென கரடி விடுகிறார் பாதுகாப்புச் செயலர்.

- முப்படைத் தளபதியான ஜனாதிபதி இது குறித்து மூச்சுவிடுவதாகக் கூட இல்லை.

- கருணாவின் மனைவியும் பிள்ளைகளும் வெளிநாடு செல்ல முன்னாள் அமைச்சர் மிலிந்த மொறகொட உதவியதாக அரசதரப்புச் செய்திகள் கூறுகின்றன.

- அரசும், எதிர்க்கட்சியும் கருணா விடயத்தில் ஒருவருக்கொருவர் காட்டிக்கொடுக்கும் கைங்கரியத்தில் இறங்கியுள்ளனர் என்பதில் ஐயமில்லை.


- ஆக கருணா விடயத்தில் இருதரப்பினரும் நடந்து கொண்ட விதம் போர் நிறுத்த உடன்பாட்டிற்கு எதிரான, அதனை மீறிய செயலாகவே உள்ளது.

- இதேவேளை அரசின் அமைச்சர்களில் ஒருவரான டக்ளஸ் தேவானந்தா தனக்கும் கருணாவுக்குமான தொடர்பு குறித்து ஒப்புதல் வாக்குமூலமாகவே அறிக்கை விட்டுள்ளார். எனவே அவர் அரச படைகளின் பாதுகாப்பில் அரச விருந்தாளியாக இருக்கிறார் என்பது உறுதியாகின்றது.

- இது தொடர்பாக அரசு விசாரணை செய்யப்போவதாகவும் கூறப்படுகிறது. இதுவே கோமாளித்தனத்தின் உச்சக்கட்டமாகும்.

- பேரினவாதிகளால் தமிழின விரோதிகள் எவ்வாறு பாதுகாக்கப்படுகிறார்கள் என்பதற்கு இதைவிட சிறந்த உதாரணம் தேவையில்லை.

# நாடும் நடப்பும்




# ரயில்வே அதிகாரசபையை கலைக்க அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு!

கடந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசின் காலத்தில் உருவாக்கப்பட்ட ரயில்வே அதிகாரசபையை உடனடியாக கலைப்பதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி தலைமையிலான அரசு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அமைச்சரவை விபரங்களை அறிவிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் நாரஹென்பிட்டியில் அமைந்துள்ள தகவல் திணைக்களத்தில் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அமைச்சர் மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில் -

அதிகாரசபையைக் கலைப்பதற்கு சட்டவரைபு தயாரிக்கப்பட்டு நாடாளுமன்றில் சமர்ப்பிப்பதன் பொருட்டு போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவுக்கு கடந்த 23 ஆம் திகதி கூடிய அமைச்சரவை அனுமதி வழங்கியது.

பழுதடைந்துள்ள போக்குவரத்துச் சேவைகளுக்கான பேருந்துகளைத் திருத்தியமைப்பதன் பொருட்டு இந்தியக் கடனுதவித் திட்டத்தின் கீழ் ஒன்பது கோடி ரூபாய் பெற்றுக்கொள்வதற்கும் அரசு தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

# திருமலை துறைமுகப் பகுதியில் கடற்படையினர் போர்ப் பயிற்சி

திருகோணமலைத் துறைமுகக் கடற்பரப்பில் நேற்று முந்தினம் அதிகாலை முதல் பிற்பகல் வரை பாரிய போர்நடவடிக்கையில் ஈடுபடுவது போன்று கடற்படையினர் பாரிய பயிற்சி நடவக்கையில் ஈடுபட்டனர்.

எறிகணைகள் உள்ளிட்ட போர்த் தளபாடங்கள் பயிற்சிக்காக பயன்படுத்தப்பட்டதால் மக்கள் பதட்டம் அடைந்தனர் போர் நிறுத்த உடன்பாடு நடைமுறையில் உள்ள அந்தச் சூழலில் படையினர் பாரிய போர்ப் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டிருந் தமை குறிப்பிடத்தக்கது.

### வல்லரசு நாடுகள் பங்கேற்கும்

# அமெரிக்க விமானப்படை ஒத்திகையில் இலங்கை விமானப்படையும் பங்கேற்கும்

அமெரிக்காவில் இடம்பெறவுள்ள உலக வல்லரசு நாடுகள் கலந்து கொள்ளும் விமானப்படை ஒத்திகையில் இலங்கை விமானப்படையும் பங்குபற்றவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது

இந்த விமானப்படை ஒத்திகையில் அமெரிக்கா, ஜேர்மனி, இந்தியா, கனடா, பிரான்ஸ், சிங்கப்பூர் மற்றும் பல நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளன. இத்தகைய விமானப்படை ஒத்திகையில் இலங்கை விமானப்படை அனுமதிக்கப்பட்டுள்ளமை இதுவே முதற்தடவையாகும்.

நாடுகளுக்கிடையில் கடற்படை மற்றும் விமானப்படை ஒத்துழைக்கும் வகையிலேயே இவ் ஒத்திகை நிகழ்வு இடம்பெறவுள்ளது.

அடுத்த மாதம் 15 ஆம் திகதி ஆரம்பமாகும் இவ் விமான ஒத்திகை தொடர்ந்து 15 நாட்கள் வரை இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

### யாழ்.கோட்டப் பாடசலைகளின்

# தமிழ்த்தினப் போட்டி 3 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்.கோட்டமட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் அடுத்த மாதம் 03ம், 04ம் திகதிகளில் யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இரண்டு நாள் இடம்பெறும் அரங்க நிகழ்வுப் போட்டிகளில் முதல் நாள் சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் வில்லுப் பாட்டு, நாட்டுக்கூத்து, நாடகம், விவாதம், தமிழறிவு வினா விடை, முஸ்லிம் நிகழ்ச்சி, பேச்சு, வாசிப்பு என ஒவ்வொரு பிரிவுகளிற்கும் இடம்பெறவுள்ளது.

இரண்டாம் நாள் ஞாயிறு காலை 9 மணிமுதல் இசையும் அசைவும், இசை - தனி, குழு, நடனம் - தனி, குழு, நாட்டிய நாடகம், பாவோதல், ஆகிய போட்டிகளும் ஒவ்வொரு பிரிவுகளிற்கும் இடம்பெறவுள்ளது.

யூலை 17 ஆம் திகதி தமிழ்த்தினப் போட்டிகளின் எழுத்தாக்கப் போட்டிகள் புனித மரியாள் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. இதில் சிறுகதை, குறுநாடக ஆக்கம், கட்டுரை, கவிதை போட்டிகளும் இடம்பெறுமெனவும் இவை தொடர்பாக யாழ்.கோட்டத்திற்குட்பட்ட பாடசாலைகளிற்கு சுற்றுநிருபமூடாக அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் நிகழ்வுகளில் கலந்துகொள்ளும் பாடசாலைகள் உரிய முறையில் மாணவர்களை ஒழுங்கு செய்து போட்டிகளில் கலந்து கொள்ளுமாறும் கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ்.எஸ்.தங்கராசா தெரிவித்துள்ளார். (91)

# கூட்டணிக் கிளை அலுவலகங்களை வெளிநாடுகளில் அமைக்க சங்கரி முயற்சி

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கிளை அலுவலகங்களை ஜேர்மனி மற்றும் சுவிற்சர்லாந்து ஆகிய நாடுகளில் ஆரம்பிப்பதற்காக வீரசிங்கம் ஆனந்தசங்கரி அந்நாடுகளுக்கான விஜயம் ஒன்றை விரைவில் மேற்கொள்ளவுள்ளார்.

அதேவேளை ஏற்கனவே கனடா மற்றும் இங்கிலாந்தில் உள்ள கட்சியின் அலுவலகங்களில் பணிகளை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சிகளிலும் தான் ஈடுபட்டுள்ளதாக ஆனந்தசங்கரி கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கிலநாளேடு ஒன்றிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்ர்.

புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள கட்சி ஆதரவாளர்களின் கோரிக்கையின் அடிப்படையிலேயே தான் இம்முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்த அவர், அவுஸ்ரேலியாவிலும் கட்சியின் அலுவலகம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டிய தேவையை வலியுறுத்தியுள்ளார்.

# மிதிபலகைப் பயணத்தை தடை செய்ய அரசு முடிவு!

(கொழும்பு)

அடுத்த மாதம் முதல் பேருந்துகளின் மிதிபலகைகளில் நின்று பயணம் செய்பவர்களுக்குத், தடை விதிக்கப்படவுள்ளதுடன், அவ்வாறு மீறிப்பயணம் செய்பவர்களுக்கு தண்டப் பணம் அறவிடுவதற்குப் போக்குவரத்து ஆணைக்குழு முடிவு செய்துள்ளதாக போக்குவரத்துப் பிரதி அமைச்சர் வசந்த அகலவித்த தெரிவித்தார்.

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவில் நேற்று முந்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பிலேயே, பிரதி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது -

அரச மற்றும் தனியார் பேருந்துக்களுக்கு பொதுவான நேர சூசிகையைத் தயாரிப்பதற்கு இனி வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

பேருந்துகளில் பணிபுரியும் சாரதிகள் மற்றும் நடத்துனர்களுக்கும் விசேட சீருடைகளை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நோக்கு

பரணி

# ஜனநாயக அரசியலுக்கு எதிர்ச்சொல் அன்று கம்யூனிசம்; இன்று பயங்கரவாதம்

மக்களாட்சியின் மகத்துவம் நாடாளுமன்றம் என்று கூறுவார்கள். நாட்டை ஆளுவதற்காக, மக்களால் தேர்ந்தெடுக்கப்படுவர்கள் ஆட்சி நடத்தச் செல்லும் இடம் நாடாளுமன்றம். எனவே, நாடாளுன்றம் என்பது ஒழுக்கம் நிறைந்த ஒழுங்கான அமைப்பாக இருக்கவேண்டும். நாடாளுமன்றம் செல்பவர்கள் - கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டோடு செயற்படவேண்டியவர்கள்.

**உரிமைக்குரலை ஒடுக்குவதற்கு அரசுகள் இராணுவத்தைப் பயன்படுத்தி, அரச பயங்கரவாத இன ஒழிப்பில் ஈடுபடும் பொழுது, தற்பாதுகாப்புக்காக ஆயுதம் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அரச பயங்கரவாதம் கண்ணுக்குத் தெரிவதில்லை. மாறாக, இன ஒழிப்பை -அரச பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள் பயங்கரவாதிகளாகத் தெரிகின்றனர்.**

இலங்கையில் வெஸ்மினிஸ்டர் முறை நாடாளுமன்றம் - வெள்ளையர் வெளியேறிய பின்பு அமைக்கப்பட்டிருந்தது. தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதற்கு இந்த நாடாளுமன்றமே பயன்படுத்தப்பட்டது.

அவ்வாறு இன ஒழிப்புச் சட்டங்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காலத்தில்கூட, நடாளுமன்றம் ஒரு வகையில் ஒழுக்கம் நிறைந்ததாகவே தென்பட்டது.

அந்தக் காலத்தில் நாடாளுமன்றமும், நீதிமன்றமும் உயர்வானதாகவே கருதப்பட்டு வந்தன. ஆனால, காலம் செல்லச்செல்ல நாடாளுமன்றம் - ஒழுக்கம் குறைந்த மன்றமாக மாறத் தொடங்கியது. இவற்றின் வளர்ச்சியே இன்று நாடாளுமன்றத்திற்குள் கைகலப்பும், அடிதடியும் இடம்பெறக் காரணமாக உள்ளது.

நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சியைக் கண்டிப்பதற்காக, நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை எதிர்க் கட்சிகள் கொண்டு வருவது சம்பிரதாயமாகும். இவ்வாறு கொண்டு வரப்படுவதால், அரசு கவிழ்ந்து விடாது. ஏனெனில், ஆளும் கட்சியின் பெரும்பான்மை இருக்கும் வரை சாத்தியமாகாது. ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த கேவலம் இலங்கை நாடாளுமன்றத்திலேயே நடைபெற்றது.

ஒரு தமிழன் எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடாது என்ற ஒரே நேக்கத்தில் - இந்தத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது என்றால், ஜனநாயகம், ஜனநாயகம் என்று கூக்குரல் போடுவார்கள் என்ன பதிலை இதற்குக் கூறமுடியும்?

ஜனநாயக வழிக்கு வரவேண்டும், ஜனநாயக நீரோட்டத்தில் கலந்துகொள்ளவேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் குரல் எழுப்புவது இன்று வழக்கமாகிவிட்டது. குரல் எழுப்புவர்கள் கூறும் ஜனநாயகம் என்பது என்ன? என்று ஆய்வு செய்ய வேண்டியுள்ளது.

உலகம் அன்று இரண்டுபட்டிருந்தது. அமெரிக்கா தலைமையில் ஒரு அணியும், சோவியத் தலைமையில் மற்றொரு அணியும், இருந்தது. சோவியத் அணியை ஜனநாயகத்திற்கு எதிரான அணி எனவும், அமெரிக்க அணியை ஜனநாயக அணி என்றும் கூறுவார்கள். சுருங்கக் கூறினால் கம்யூனிஸம் ஜனநாயகத்தின் எதிரி என்று கூறுவார்கள். அமெரிக்காவை ஆதரிக்கும் நாடுகளில் இராணுவ ஆட்சி நடந்தாலும், அது ஜனநாயக விரோத ஆட்சியாகக் கருதப்படமாட்டது.

ஆனால், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுவுடமைக கடசி ஆட்சி ஏற்றப்பட்டாலும், அது மக்கள் விரோத ஆட்சியாகக் கருதப்பட்டது. அவ்வாறு மக்களால் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்த ஆட்சிகளை, இராணுவ முயற்சிகளால் அகற்றிவிட்டு, அமெரிக்காவுக்கு ஆதரவான ஆட்சியை நிறுவிவிட்டு -ஜனநாயக முதிரை குத்துவது அன்றையநிலை.

ஆனால், தற்பொழுது ஜனநாயகத்துககு எதிர்ச்சொல் பயங்கரவாதம் என்று மாற்றிவிட்டார்கள். இன ஒழிப்பில் அரசுகள் ஈடுபடும் பொழுது, இனத்தின் அழிவைத் தடுப்பதற்கு முயற்சிகள் செய்வதும், அவ்வாறு உரிமைக்குக் குரல் கொடுக்கும் பொழுது ஆயுதபலத்தைத் கொணடு அடக்குவதும், இன அழிப்பைத் தொடர்வதும் இலங்கை போனற நாடுகளின் இன்றைய நிலையாகும்.

உரிமைக்குரலை ஒடுக்குவதற்கு அரசுகள் இராணுவத்தைப் பயன்படுத்தி, அரச பயங்கரவாத இன ஒழிப்பில் ஈடுபடும் பொழுது, தற்பாதுகாப்புக்காக ஆயுதம் எடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். ஆனால், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு அரச பயங்கரவாதம் கண்ணுக்குத் தெரிவதில்லை. மாறாக, இன ஒழிப்பை -அரச பயங்கரவாதத்தை எதிர்ப்பவர்கள் பயங்கரவாதிகளாகத் தெரிகின்றனர்.

விடுதலை இயக்கத்தினர்கள் பயங்கரவாதிகளாகக் கருதப்படுகின்றனர். ஏனெனில், பயங்கரவாதம் என்றால் சரியான வரைவிலக்கணம் என்ன என்று எவரும் கூறமுடியாத நிலையில் உலகம் இருக்கின்றது. அமெரிக்கா, இந்தியா போன்ற வல்லரசுகள் எதனைப் பயங்கரவாதம் என்று கூறுகின்றனவோ, அவை பயங்கரவாதமாகக் கருதப்படுகின்றதேயன்றி, உண்மையான பயங்கரவாதத்துக்கும், விடுதலைப் போராட்டத்துக்கும் இடையிலுள்ள வேறுபாட்டை உலகம் காணமறுக்கின்றது.

அதனால்தான், தமிழினத்தின் விடுதலை வேண்டிநிற்கும் விடுதலைப் புலிகளை - பயங்கரவாத முத்திரை குத்தி சில நாடுகள் பாரககின்றன. தமிழ் மக்கள் - தங்களின் பிரச்சினையைத் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மாத்திரம் பேசித் தீர்க்க வேண்டும் என்றும், தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்றும், இடைக்காலத் தன்னாட்சியை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைக்க வேண்டும் என்றும், ஜனநாயக வழியில் தீர்ப்பு வழங்கியுள்ளார்கள்.

ஆனால், இதைச் சில நாடுகள் கண்டுகொள்ளாமல் நடப்பது ஏன் என்பதுதான் புரியவில்லை. ஜனநாயகம், ஜனநாயகம் என்று கூப்பாடு போடும் நாடுகள் - தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியில் அளித்த தீர்வைக் காண மறுப்பது ஏன் என்பதுதான் புரியாத புதிராக உள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் போடடியிடுவதுதான் என்று அந்த நாடுகள் எண்ணுகின்றன. ஆனால், மக்கள் தேர்தலில் அளித்த ஜனநாயகத் தீர்வை ஏன் ஏற்றுக்கொள்ள மறுக்கவேண்டும். நாடாளுமன்றத்தில் என்ன நடைபெறுகின்றது. செங்கோலை எடுத்துக் கொண்டு ஒருவர் ஓடுகின்றார். சபைத் தலைவர் வரும்பொழுது எல்லா உறுப்பினர்களும் எழுந்து நிறபது சம்பிரதாயம். ஆனால் நாங்கள் புத்த துறவிகள், நாங்கள் எழுந்து நிற்கமாட்டோம் என்ற மமதையில் சில உறுப்பினர்கள் - நாங்கள் மற்றைய நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இருக்கமுடியாது, எமக்குத் தனி இருக்கை வேண்டும் என்ற குரல் ஒரு பக்கம் எழுகின்றது.

இத்தனைக்கும் மேலாக மன்றத்தின் நடுப்பகுதிக்குச் சென்று, கூக்குரல் இட்டு, நாடாளுமன்ற நடவடிக்கைகளைக் குழப்புவது - இவை எலலாம் ஜனநாயப் பண்புகள் என்று ஏற்றுக்கொள்ள முடியுமா?

நாட்டின் அதி உயர் பீடத்திலொன்றான நாடாளுமன்றமே சரிவர, ஒழுங்காக இயங்காத நிலையில், ஜனநாயம் கேலிக் கூத்தாகிவிட்ட நிலையில், இந்த நாடாளுமன்றத்துக்குப் புலிகள் போகவேண்டும் என்று கூறுவது - சிரிப்புக்கிடமாகத் தான் தெரிகின்றது.

தமிழ் மண்ணின் பெரும் பகுதியை மீட்டெடுத்து, அங்கே ஓர் ஒழுங்கான ஆட்சியை நடத்தும் புலிகள்- மககள் ஆணைக்கு அமைவாக நடந்துகொள்வதைப் புரிதுந்துகொள்வதுதான் ஜனநாயக வழியாகும். இதனை உலகம் ஏற்றேயாகவேண்டும். வீணாகப் புலிகள்மேல் பயங்கரவாத முததிரை குத்தி, தடைசெய்வது ஜனநாயகப் பண்புகளை மீறும் செயலாகவே கொள்ளப்படும்.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் என்று கூறுவதன்மூலம், முழுத் தமிழினத்தையுமே பயங்கரவாதிகளாகத்தான் கருதவேண்டிய நிலை ஏற்படுகின்றது. புலிகள் வேறு, மக்கள் வேறு என்ற பரப்புரை எடுபடாமல் போயுள்ள இந்தவேளையில், புலிகள் - பயங்கரவாதிகள் என்றால், தமிழ் மக்கள் அனைவரும் பயங்கரவாதிகளே.

இன்றைய சிறுபான்மைச் சிங்கள அரசு தனது ஆட்சியை நிலைநிறுத்தப் படாதபாட்டுக் கொண்டிருக்கின்றது. அமைச்சர் கதிர்காமரோ உலக நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் செய்து ஒரு கருத்தை முன்வைக்க, ஜனாதிபதி மக்களை ஏமாற்றுவதற்காக இடத்துக்கிடம் வெவ்வேறு விதமான கருத்துக்களை முன்வைக்கின்றார்.

தமிழ் மக்களின் சமாதானக் கனவு - கனவாகவே போய்விடுமா? மீண்டும் ஒரு யுத்தமா? என்று கேள்வி எழுந்து கொண்டிருக்கின்றது. ஆட்சியாளர்கள் மக்களைத் திசை திருப்ப, எதிர்க்கட்சி உறுப்பினர்களை கைது செய்வது நடைபெறுகின்றது.

பொருளாதார மீட்சி - சமாதானம் இன்மையால், எதிர்கட்சிகளைப் பழிவாங்கும் ஜனநாயகம் நாட்டிலே வளர்கின்றது. இவை எல்லாம் சரிவராத நிலையில், மீண்டும் ஒரு தேர்தல் திணிக்கப்படும் - மக்களின் பணம் தேர்தலுக்காகப் பயன்படுத்தப்படும் - நாடு அழிவுப் பாதைக்குச் செல்லும்.

இவ்வாறு ஒரு தேர்தல் திணிக்கப்படுவதனால், தமிழ் மக்கள் தமது ஒற்றுமையை மீண்டும் எடுத்துக் காட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. அதுவும் தப்பித் தவறி தமிழ்த் தேசியத்துக்கு எதிரான ஒருவர் இந்த முறை தெரிவாகியது போல், மீண்டும் நடைபெற விடமாட்டார்கள் தமிழ் மக்கள்.

அப்பொழுதாவது உலகம் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் அல்லர் என்று ஏற்றுக்கொள்ளுமா? இதுதான் தமிழ் மக்கள் எதிர்பார்ப்பாகும்.

சந்திப்பு

நெடுந்தீவு கண்ணன்

# திருத்தவேலைகளுக்கு காத்திருக்கும் குமுதினிப்படகும் குமுதினிப்படகுக்காகக் காத்திருக்கும் பொதுமக்களும்

**நெடுந்தீவு கடற்போக்குவரத்து சேவையைப் பொறுப்பேற்று நடத்திவரும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பிரதம பொறியியலாளர் எஸ்.ஸ்ரீனிவாசன் அவர்களுடன் - நெடுந்தீவு போக்குவரத்தில் ஈடுபட்டுவந்த குமுதினிப்படகு, திருத்த வேலை காரணமாகப் பல மாதங்களாக சேவையில் ஈடுபடாதிருப்பதையிட்டும், அதற்கான காரணங்கள் தொடர்பாக அவரைச் சந்தித்து உரையாடியபோது கூறப்பட்ட கருத்துக்கள் இங்கு பிரசுரமாகின்றன.**



**குமுதினிப்படகின் திருத்த வேலைகள் கடந்த பல மாதங்களாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றதே, இதனால் நெடுந்தீவு மக்கள் பெரிதும் சிரமப்படுவதை நீங்கள் நேரடியாக அறிந்தும், இவ்வாறு வேலைகள் தாமதமடைவதற்குரிய காரணம் என்னவென்று கூறுவீர்களா?**

எமது அதிகாரசபையிலே படகுத்துறையில் அனுபவம் வாய்ந்த துறைசார் உத்தியோகத்தர் எவரும் இல்லாமையாலும், திருத்தவேலைக்கான மூலப்பொருட்களை உரியநேரத்தில் பெற்றுக்கொள்வதில் பல சிரமங்களை எதிர்கொள்வதாலும் இந்த வேலைகள் தாமதமடைகின்றன.

இதேவேளை, படகினைத் திருத்துவதற்காக கரையேற்றும் நடவடிக்கைக்கு நாம் பெரிதும் சிரமப்பட்டே - பல ஒப்பந்தகாரரின் உதவியுடன், ஒதுக்கப்பட்ட தொகைக்கும் மேலதிகமான செலவிலேயே கரையேற்றப்பட்டது.


அதுமட்டுமன்றி, ஆரம்பகாலத்தில் தீவுப்பகுதியின் போக்குவரத்துக்கென பல படகுகள் எமது அதிகாரசபையில் இருந்தபோது - குறிகாட்டுவானிலும், யாழ்ப்பாணத்திலும் பொறியியற்பகுதி ஒன்று இருந்தது. அதனால் உடனுக்குடன் வேலைகள் இடம்பெற்றது. ஆனால், இலங்கையிலேயே வீதி அபிவிருத்தி அதிகாரசபையால் நடாத்தப்படும் படகுசேவை குமுதினிப் படகுசேவை மட்டும்தான்.

இதேவேளை, துறைசார்ந்தவர்கள் இல்லாமையினால், வேலைக்கான மூலப்பொருட்களின் அளவுகளைச் சரியாக மதிப்பிடமுடியவில்லை.

இதனால், இப்போது படகுக்கு பாதுகாப்புத் தகடு பொருத்துவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட செப்பு ஆணிகள் முடிவடைந்துள்ளது. அநத ஆணிகளைப் பெறுவதில் பல்வேறு சிரமங்கள் உள்ளது. இதனை யாழ்ப்பாணத்திலேயே பெறுவதற்கான வேலைகள் இடம்பெற்று வருகின்றது.

இந்த ஆணிகள் கிடைத்ததும் படகுவேலைகளை முடித்து சேவையினை நடாத்தலாம்.

இது எமது அசமந்தப் போக்கினால் தாமதமடையவில்லை என்பததையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



குமுதினிப்படகு வேலைகள் [illegible] ஈடுபடாமை போன்ற காரணங்களை

குமுதினிப்படகு - திருத்த வேலைகள் முடிந்து, எப்போது சேவையை ஆரம்பிக்கும் என்பது

**அரச அதிகாரிகளுக்கோ அல்லது அது பற்றிய பொது அறிவித்தலையோ தெரியப்படுத்தியதாகத் தெரியவில்லை. இது தொடர்பாக என்ன கூற விரும்புகிறீர்கள்?**

சேவை நிறுத்தப்பட்டுள்ளது என்பது தொடர்பான அறிவித்தலைத் தவிர, வேறு அறிவித்தல்களை நாம் மேற்கொள்ளவில்லை. ஆனால், அரச அதிகாரிகளிடம் நிலமைகளை எடுத்துக்கூறியுள்ளேன்.

எமது துறைசார் ஊழியர்கள் பற்றாக்குறையினாலும், மூலப்பொருள் கிடைப்பதில் ஏற்படும் தாமதத்தினாலும் மக்களுக்கு ஏற்படும் துயரத்தை நினைத்து நான் வேதனையடைகிறேன்.

**தொடர்பாகக் கூறுங்களேன்?**

நெடுந்தீவு மக்களுக்கும், அதிகாரிகளுக்கும் சுமார் நான்கு தடவைகளாகப் படகுசேவை - இத்தனை நாட்களுக்குள் ஆரம்பிக்குமென வாக்குறுதிகளைக் கொடுத்து, அவற்றை நிறைவேற்றமுடியாமல் போய்விட்டது.

மேலும் திகதிகள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய நிலையில்தான் இப்போதும் உள்ளேன். எனவே, தற்போது ஆணிகள் கிடைத்ததும் வேலைகளை உடன் முடித்து, சேவையில் ஈடுபடுத்துவதற்கு ஏற்றவாறு படகுக்கு வர்ணம் பூசும்வேலை, இயந்திர பாகம் சுத்திகரிப்பு வேலை என்பன நடைபெற்று வருகின்றது.

**இந்தப் படகுசேவை தொடர்பாக நெடுந்தீவு மக்களுக்கு என்ன கூற விரும்புகின்றீர்கள்? எமது பத்திரிகை மூலமாக படகு சேவை தொடர்பாக பல அழுத்தங்கள் கொடுக்கப்பட்டதை தாங்கள் அறிவீர்கள். எனவே, இந்தப் பத்திரிகைமூலமாகவே உங்களது கருத்தைக் கூறுங்கள்?**

வேலைகளை உரியகாலத்தில் செய்து, சேவையை ஆற்றமுடியாதையிட்டு எனது மனவருத்தத்தினைத்தான் தெரிவித்துக்கொள்ள முடியும்.

இருப்பினும், புதிய படகொன்றினை சேவையில் ஈடுபடுத்த - பல வழிகளிலும், பலராலும் அழுத்தங்கள் கொடுக்கப்பட்டே வருகின்றது. அதற்கும் எம்மாலான பல முயற்சிகளை எடுப்போம்.

இதேவேளை தற்போது திருத்த வேலை முடிந்ததும், குமுதினிப்படகுக்குரிய பணியாளர்களில் நெடுந்தீவைச் சேர்ந்தவர்களையே முழுமையாக ஈடுபடுத்தவுள்ளோம். அந்த வகையிலே படகோட்டி நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல் ஏனைய சிப்பந்திகளும் நியமிக்கப்படவுள்ளனர்.

இதன்மூலம் பொறுப்புடன், சீரான சேவையினைப் பெறமுடியும் எனவும் நினைக்கிறேன். ♦

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் பஸ்கள் மீது

# பெற்றோல் பவுஸர் மோதியதில் ஏற்பட்ட தீவிபத்தில் பலர் பலி!

## ஈரானில் துயரச்சம்பவம்




பெற்றோல் பவுஸர் ஒன்று வீதியில் நிறுத்தப்பட்டிருந்த பயணிகள் பஸ்கள் மீது மோதி வெடித்ததில் ஏற்பட்ட தீ விபத்தில் 90 பயணிகள் உயிரிழந்துள்ளதுடன் பெருமளவிலான பயணிகள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் ஈரானின் தென்கிழக்கு பகுதி நகரான சகீடன் பிரதேசத்திலுள்ள பிரதான வீதியில் நேற்றுக்காலை இடம்பெற்றது. இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது -

பயணிகள் பஸ்கள் சகீடன் நகரத்தை நோக்கிய பிரதான வீதியான பாமில், பொலிஸாரின் தரிப்பிடத்தில் சோதனைக்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த வேளை தலைநகர் தெஹ்ரானிலிருந்து பெற்றோல் நிரப்பப்பட்ட பவுஸர் வாகனம், சகீடன் நகரப்பகுதிக்கு வந்தவேளையில் முன்னால் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ்கள்மீது மோதியதனால் பெரும் தீ பரவியது. இந்தத் தீயினால் எரியுண்ட பயணிகளே பெருமளவில் உயிரிழந்தனர். அத்துடன், பெருமளவானோர் தீக்காயங்கள் ஏற்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதுவரை 90 சடலங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக செஞ்சிலுவைச் சங்கம் அறிவித்துள்ளது. ஆனால், சகீடன் மாநில ஆளுநர் ஹெய்தார் அலி - நொராயி 70 பொதுமக்கள் கொல்லப்பட்டதாகவும், 84 பேர் காயமடைந்ததாகவும் அரச தொலைக்காட்சிக்குத் தெரிவித்தார்.

இது மிகப்பெரியதொரு பேரழிவாகும். இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர்களின் முகங்கள் அடையாளம் காணமுடியாதிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

18000 லீற்றர் பெற்றோலுடன் குறித்த பவுஸர் வேகமாகவந்ததாகவும், இதன்போது, சாரதி தனது கட்டுப்பாட்டை இழந்ததனாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கட்டுப்பாட்டை இழந்த பவுஸர் நிறுத்திவைக்கப்பட்டிருந்த பஸ் ஒன்றின்மீது மோதியவேளை பவுஸரிலிருந்த பெற்றோல் கசிந்து தீப்பற்றியதுடன், அருகில் நின்ற பல பஸ்கள் மற்றும் வாகனங்களும் தீப்பற்றியதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் நடைபெற்ற இடத்தில் லொறி அல்லது வேறொரு வாகனம் தார் கொண்டுவந்ததாகவும், இவற்றின்மீது தீ பரவியதாலேயே பெருமளவு சேதம் ஏற்பட்டுள்ளது.

சுமார் இரண்டு மணிநேர போராட்டத்தின் பின்பே தீயணைப்புப்படையினர் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனர்.

இதேவேளை, உயிரிழந்த மற்றும் காயமடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென அஞ்சப்படுகின்றது.

# ரோபோ இயக்கும் புதிய உளவு வாகனம்



(வொஷிங்ரன்)

எதிரிகள் பகுதிக்குள் ஊடுருவிச்சென்று அங்கு நிலைமைகளை உளவுபார்க்க அமெரிக்க விஞ்ஞானிகள் புதய உளவு வாகனம் ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இந்த உளவு வாகனத்தில் 'மட்டில்டா' என்ற ரோபோ உள்ளது.

ஆள் இல்லாத இந்த உளவு வாகனம் விமானப்படைத்தளம், முக்கிய இராணுவத்தளம் ஆகியவற்றைப் பாதுகாக்கும் பணியிலும் ஈடுபடுத்தப்படும். புளோரிடா மாகாணத்தில் உள்ள அமெரிக்க விமானப்படைத் தளத்தில் இந்த உளவு வாகனம் சோதனைரீதியில் பயன்படுத்தப்பட்டது. கண்ணிவெடிகளைக்கூட இது கண்டுபிடித்துவிடும். குண்டுவீச்சுத் தாக்குதலைக்கூட ஓரளவு இந்த வாகனம் சமாளிக்கும்.

# இஸ்ரேலிய இராணுவம் நடத்திய கண்காட்சி; பலஸ்தீனரை அவமானப்படுத்தியுள்ளதாம்!

பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரான கெப்றோனில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம் இடம்பெற்ற கண்காட்சிமூலம், இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனர்களை அவமதித்துள்ளதாகக் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

டெல்அவிவில் இடம்பெற்ற கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த புகைப்படங்களே பலஸ்தீனர்களை இழிவுபடுத்துவதாகக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரேலிய இராணுவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

இஸ்ரேலிய இராணுவ வீரர்களால் இக்கண்காட்சிக்காக சேகரிக்கப்பட்ட படங்களில் பலஸ்தீன சிறுவர்களை ஓடவைத்து கைக்குண்டுகளை வீசும் படங்கள், பலஸ்தீனர்களது கார்ச் சாவிகளைப் பறிக்கும் படங்கள், [illegible]ணமக்களை இஸ்ரேலிய இராணுவத்தினர் துன்புறுத்[illegible]ம் படங்கள் என்பன அடங்குகின்றன.

கடந்த செவ்வாய்க்கிழமை குறிப்பிட்ட இடத்திற்குச் சென்ற இஸ்ரேலிய இராணுவப் பொலிஸார் - கண்காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த புகைப்படங்கள் மற்றும் வீடியோ கசற்றுக்களையும் கைப்பற்றியுள்ளனர்.

இது தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய பத்திரிகையொன்று - இந்தத் துஷ்பிரயோகம் தொடர்பான விமர்சனங்களுக்கு அஞ்சும் இஸ்ரேலிய இராணுவத்தினர் தமது குற்றங்களை ஒப்புக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும் மறுக்கின்றனர் என தெரிவித்துள்ளது.

இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய பாதுகாப்புப் பிரிவினர் - இவ்விசாரணை தொடர்பான அனைத்து அனுமதிகளையும் நீதிமன்றிடம் இருந்து பெற்றுக்கொண்டுள்ளதாகவும், பொலிஸாருடைய விசாரணைகளுக்கு தாம் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாகவும் தெரிவித்தனர்.

தொடர்ந்து கருத்துத்தெரிவித்த இஸ்ரேலிய இராணுவ அதிகாரி - இத்தகைய சிக்கலான சூழ்நிலைகளில் மனிதநேயத்துடன் எவ்வாறு நடந்துகொள்வது என்பது தொடர்பாக படையினருக்கு கற்பிக்கவுள்ளதாகத் தெரிவித்தார். 500 யூதக்குடும்பங்களைக்கொண்ட கெப்றோன் பகுதியில் 1 லட்சத்து 30 ஆயிரம் பலஸ்தீனர்கள் செறிந்து வாழ்வது குறிப்பிடத்தக்கது.

# பலஸ்தீன நகரான நப்லஸிற்குள் இஸ்ரேல் இராணுவம் சென்றுள்ளது

மிகப்பெரும் இராணுவ நடவடிக்கைக்காக இஸ்ரேல் இராணுவம் பலஸ்தீனத்தின் மேற்குக்கரை நகரான நப்லஸ் பகுதிக்குள் சென்றுள்ளது.

குண்டுகள் தயாரிக்கும் தொழிற்சாலைகள் வீடுகளில் உள்ளனவா என இஸ்ரேலிய இராணுவம் கடந்த புதன்கிழமை இரவு வீடுகளில் தேடுதலை நடத்தியது.

இந்த நகரமேயர் மொகமட் அலுல் தெரிவிக்கையில் - இஸ்ரேலிய இராணுவத்தினர் அதிர்ச்சிதரும் வகையில் வீடுகளின் கதவுகளைத் திறந்துவிட்டு உரிமையாளர்களைச் சுற்றிவளைத்து விசாரணைக்குட்படுத்தியதாகத் தெரிவித்தார்.

இவ்வாறு சென்ற படையினர் நப்லஸ் பகுதியிலமைந்துள்ள வீடொன்றினை இடித்துத் தரைமட்டமாக்கியுள்ளனர். இந்தவீடு இடிக்கப்பட்டதற்கு அங்கு வெடிபொருட்களை தாம் கண்டுபிடித்ததே காரணமெனப் படையினர் தெரிவித்தனர்.

குறித்த வீட்டில் ஏழுபேர் இருந்ததாகவும், அவர்களில் பெரும்பாலானோர் இஸ்லாமிய ஆயுதக்குழுவான அல் - அக்சாமாட்டியர்ஸ் அமைப்பின் உறுப்பினர்களெனவும் படையினர் தெரிவித்தனர்.

பலஸ்தீன குழுவொன்றின் மீது இஸ்ரேலிய இராணுவத்தினர் கண்ணீர்ப்புகை மற்றும் துப்பாக்கிப்பிரயோகத் தாக்குதலை மேற்கொண்டதில் இரு மக்கள் காயமடைந்ததாக வைத்தியசாலை அதிகாரிகள் தெரிவித்தனர்.

படையினர் துப்பாக்கிப் பிரயோகத்தைத் தம்மீது மேற்கொண்ட பின்னரே தாம் அவர்கள்மீது கற்கள் வீசித் தாக்குதல் நடத்தியதாக பலஸ்தீனர்கள் கூறிய அதே வேளை, பலஸ்தீனக் குழுவொன்று தம்மீது வெடிக்கக்கூடிய குண்டுகளை வீசியபோது மற்றையவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது.

இந்த இராணுவ நடவடிக்கை பல நாட்களாக தொடருமென இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.




# அணுவாயுத பரிசோதனையை வடகொரியா நடத்தவுள்ளதாம்


## அமெரிக்க அதிகாரிகள் தெரிவிப்பு

நிறுத்தப்பட்டுள்ள சர்வதேச உதவிகள் மீளக்கிடைக்காவிட்டால் அணுவாயுத பரிசோதனையை நடத்தப்போவதாக வடகொரியா எச்சரித்துள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

ரஷ்யா, சீனா, அமெரிக்கா, ஜப்பான் மற்றும் இரண்டு கொரியாக்கள் தற்போது பீஜிங்கில் நடத்தும் பேச்சுவார்த்தையிலேயே நேற்றுமுன்தினம் வடகொரியா இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான ஒரு அச்சுறுத்தலை வடகொரியா முன்னர் விடுத்திருந்தபோதிலும், பேச்சுவார்த்தை சுமுகமாகவே இடம்பெற்றதாக பெயர் குறிப்பிடவிரும்பாத அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வடகொரியாவால் விடுக்கப்பட்டது நேரடியான அச்சுறுத்தல் அல்லவென தென்கொரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.



இதேவேளை, தற்போது கொரியாக்களின் அணு ஆயுதம் தொடர்பாக நடைபெறும் ஆறு நாடுகளுக்கிடையிலான பேச்சுவார்த்தை நாளை நிறைவடையவுள்ளது.

# மரபணு சோதனைக்கு பிறகும் நேதாஜி குறித்த மர்மம் நீடிப்பு!



மரபணு பரிசோதனை முடிவுகள் வேறுபடுவதால் - நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் காணாமல் போனதில் மர்மம் நீடிக்கிறது.

இரண்டாம் உலகப்போர் முடியும் தறுவாயில் நேதாஜி ஜப்பானில் இருந்து விமானத்தில் புறப்பட்டார். அது விபத்துக்குள்ளாகி அவர் இறந்துவிட்டதாக ஒரு கருத்துள்ளது. விபத்திலிருந்து அவர் தப்பி தலைமறைவாக வாழ்ந்துவருவதாக மற்றொரு கருத்து உள்ளது. இது குறித்து நீதிபதி எம்.கே. முகர்ஜி கமிஷன் விசாரணை நடத்திவருகிறது.

லக்னோவில் கும்நாமி பாபா என்ற சாது வாழ்ந்து மறைந்தார். அவர்தான் நேதாஜி என்ற பரவலான கருத்தும் உள்ளது.

எனவே, அங்குள்ள அவரது கையெழுத்து மற்றும் பற்கள் கைப்பற்றப்பட்டன. நேதாஜி உறவினர்களிடம் இரத்தம்பெற்று அந்த பற்கள் மரபணுப் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன. கையெழுத்துப் பிரதிகள் தடயவியல் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டன.


அதன் முடிவுகள் குறித்து நீதிபதி முகர்ஜி கூறியதாவது -

கொல்கத்தாவில் உள்ள மத்திய தடய அறிவியல் பரிசோதனை சாலையில் மரபணுப் பரிசோதனை நடந்தது. அதன் முடிவுகள் நேதாஜி உறவினர்களின் இரத்தத்துடன் ஒத்துப்போகவில்லை. ஹைதராபாத் சோதனைச்சாலையிலும் இது போன்ற சோதனை நடத்தப்பட்டது. பற்களை மட்டுமே வைத்து முடிவுக்கு வரமுடியாது. வேறு மாதிரிகள் கிடைத்தால் சோதனை முடிவு துல்லியமாக இருக்கும் என கூறப்பட்டுள்ளது. அவரது கையெழுத்து குறித்து மூன்று நிபுணர்கள் மூன்று விதமான கருத்தை கூறுகின்றனர். இதில் இன்னும் மர்மம் நீடிக்கிறது. இவ்வாறு நீதிபதி முகர்ஜி கூறினார்.

# கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

உப பிடிபாடுகளாகச் சிக்கி இறக்கும் சிறிய திமிங்கிலங்கள், டொல்பின்கள் மற்றும் கடற்பன்றிகளின் எண்ணிக்கை மட்டுமே ஆண்டுக்கு 300,000 க்கும் அதிகம் ஆகும்.

உலகச் சூழல் தினம் - யூன் 05



World Environment Day - June 05

எங்கள் கடல்களின் உயிர்ப்பைக் காப்போம்!

சூழல் பாதுகாப்புப் பகுதி
தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமிழீழம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# வீதி விபத்துக்களை தடுப்பதற்கு யாழ். நீதிமன்றில் ஆலோசனை

வீதிவிபத்துக்களைத் தடுப்பது தொடர்பாக நேற்று யாழ்.நீதிமன்றில் ஆலோசனைக் கூட்டம் ஒன்று இடம் பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆலோசனைக் கூட்டத்தில் தனியார் மற்றும் அரச போககுவரத்துச் சேவைகளின் தலைவர்கள், முகாமையாளர்கள் யாழ். போக்குவரத்துப் பொலிஸ் அதிகாரியான செனரத், மின்சார சபை அதிகாரிகள், நல்லூர் பிரதேசசபைச் செயலர், வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளர், வீதி அபிவிருத்தித் திணைக்கள அதிகாரிகள், யாழ்.மாநகரசபை அதிகாரிகள், யாழ்.மோட்டார் போக்குவரத்து திணைக்கள வாகனப் பரிசோதகர் குலாஸ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் வீதிக் குறியீடுகளை நிர்மாணிப்பதுடன், வீதிகளைப் புனரமைப்பதெனவும், யாழ். நகரின் முக்கிய சந்திகளில் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்த முயற்சிப்பதெனவும் யாழ்.நகரப் பகுதி பஸ்தரிப்பிடத்தில் அமைக்கப் பட்டிருக்கும் பழக்கடைகளை அகற்ற பொலிஸாரின் உதவி பெறுவதெனவும் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதுடன் இது தொடர்பாக அடிக்கடி ஆலோசனைக் கூட்டங்கள் நடத்துவதெனவும் முடிவெடுக கப்பட்டுள்ளது. (ப)

# வீதியில் மயங்கி வீழ்ந்த குடும்பஸ்தர் மரணம்!

## சங்கானையில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

சங்கானைப் பகுதியில் துவிச்சக்கர வண்டியில் சென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் மயங்கி வீழ்ந்து உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று இடம் பெற்றது. 30 வயதான க.பாலேந்திர குமார் என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இந்தச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

குறித்த நபர் வீதியால் சென்று கொண்டிருந்தபோது மயக்கமடைந்து ஸ்தலத்தில் வீழ்ந்தார். இதையடுத்து, பொதுமகன் ஒருவர் இவரைத் தனது உழவு இயந்திரத்தில் அவரது வீட்டிற்கு கொண்டு சென்று, அங்கிருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லும் வழியில் மரணமானார்.

# மட்டக்களப்பு விபத்தில் பத்துப்பேர் படுகாயம்!

ஆலயத்தில் இடம்பெற்ற திருவிழாவிற்குச் சென்றுவிட்டு தனியார் வானொன்றில் திரும்பிக்கொண்டிருந்தவேளை வீதியிலுள்ள மின்கம்பத்துடன் வான்மோதி விபத்துக்குள்ளானதில் 10 பொதுமக்கள் காயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று மட்டக்களப்பு நாவற்குடாப் பகுதியில் இடம்பெற்றது. இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

மட்டக்களப்பில் அமைந்துள்ள நொச்சி பழையகுள பிள்ளையார் கோவில் திருவிழாவில் கலந்துவிட்டு மட்டக்களப்பு நகர் நோக்கி தனியார் வானொன்றில் மக்கள் சென்றனர்.

இவ்வாறு சென்ற வான் நாவற்குடா பகுதியிலுள்ள மின்கம்பத்துடன் மோதி விபத்துக்குள்ளானது. இதில் சாரதி உட்பட 10 பேர் படுகாயமடைந்தனர். இவர்கள் அனைவரும் உடனடியாகவே மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 10 பேரில் மூவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மது அருந்திவிட்டு சாரதி வாகனத்தை ஓட்டியதாலேயே இந்த விபத்து இடம்பெற்றதாக தெரியவருகிறது.

# மட்டக்களப்பில் வயோதிபர் துண்டுகளாக வெட்டிக்கொலை

(கொழும்பு)

மடடக்களப்பு - நாவற்குடாப் பகுதியில் வயோதிபர் ஒருவர் மூன்று துண்டுகளாக வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

மாரியம்மன் வீதி நாவற்குடாவைச் சேர்ந்த இர்ரசிங்கம் (வயது-75) என்பவரே வெட்டிப்படுகொலை செய்யப்பட்டவராவார். இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது -

மாரியம்மன் வீதி நாவற்குடாவைச் சேர்ந்த இந்த வயோதிபர் கடந்த மூன்று நாட்களாக இவரது வீட்டிலிருந்து காணாமற்போயுள்ளார்.

இந்த நிலையில், நேற்று அந்தப் பகுதியில் உள்ள மாரியம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள கிணறொன்றில் இருந்து துர்நாற்றம் வீசியது. இதனால் அந்தப்பகுதியில் இருந்தவர்கள் கிணற்றுக்குள் இறங்கிப் பாாத்தபோது இரண்டு உரப் பைகளில் சடலம் இருப்பதனைக் கண்டனர்.

இவற்றை வெளியே எடுத்துப் பார்த்தபோது காணமற்போன இராசசிங்கத்தினுடையதாக இருந்தது.

மட்டக்களப்பு மாவட்ட நீதிவான் அஜ்மீர் சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைப் பார்வையிட்டார்.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தில் சமையல் பணிபுரியும் ஒருவரே காரணமென சந்தேகிக்கப்படுகிறது. தற்போது இந்த நபர் தலைமறைவாகியுள்ளார்.

காணித்தகராறு காரணமாக நேற்று மட்டக்களப்பு நீதிமன்றில் நடைபெற இருந்த வழக்கில் கொலையுண்டவர் சாட்சியமளிக்க இருந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை நடத்திவருகின்றனர்.

## ரஷ்யத் தூதுவர் காலமானார்

(கொழும்பு)

இலங்கைக்கான ரஷ்யத் தூதுவர் மிக்கயில் கௌவிக் காபோவ் கொழும்பில் உள்ள தனியார் மருத்துவமனையொன்றில் காலமானார்.

56 வயதான இவர் இருதய நோய்க்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மரணமானார். இவரது உடல் நேற்றிரவு ரஷ்யாவுக்கு அனுப்புவதற்கு ஏற்பாடாகியிருந்தது.

2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி இலங்கைக்கான ரஷ்யத் தூதுவராக பதவியேற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கற்களினால்...

குழுவொன்று இவரை வாய்க்கு வந்தபடி திட்டித்தீர்த்தது. இதன் பின் இவருக்கும், அந்த இளைஞர் குழுவிற்கும் இடையே வாய்த்தர்க்கம் இடம்பெற்றது. இவ்வேளை இளைஞர் குழுவிலிருந்த சிலர் இவர் மீது கற்களை வீசித் தாக்குதலை நடத்தினர்.

இந்தத் தாக்குதலால் தலையில் படுகாயமடைந்த நிலையில் அவ்விடத்தில் வீழ்ந்த இவரை வேறு சிலர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்ற வேளை இவரது உயிர்பிரிந்தது.

இது தொடர்பாக வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## இராணுவத்தினருடனான...

ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன.

ஆனால் கருணாவுக்கு உதவிய விவகாரத்தில் இராணுவத் தரப்புக்கள், அரசியல் பிரமுகர்களது தொடர்பு குறித்த தகவல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் நிலையில் புலிகள் இந்தச் சந்திப்பிலிருந்து ஒதுங்குவதாக அறிவித்துள்ளனர்.

## புலிகளின் ...

பிரதேசத்திலுள்ள விடுதலைப் புலிகளின் அலுவலகம் ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட முதலாவது தாக்குதல் இதுவாகும்.

இந்தச்சம்பவம் தொடர்பாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு விசாரணைகளை மேற்கொண்டு வருகிறது.

இதேவேளை - விசேட அதிரடிப் படையினரின் பின்னணியில் இந்த தாக்குதல் இடம்பெற்றிருக்கலாம் என விடுதலைப் புலிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

## கிழக்கு...

நடந்துகொள்வதாக உறுதியளித்துள்ளார்கள்.

எனினும் இப்போது கிழக்கில் நிலைமை இயல்பானதாக இல்லை. விசேடமாக மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களின் நிலைமை கடினமாக இருக்கிறது.

இருதரப்பினரோடு கலந்துபேசி வருகின்றோம். இதில் வற்றிபெறுவோம் என நாங்கள் எண்ணுகிறோம் என்றார்.

## கருணா ...

கருணாவின் மனைவியும் மூன்று பிள்ளைகளும் கடந்த வருடம் மலேசியாவுக்குச் செல்வதற்கு அலிசாகிர் மௌலானாதான் உதவினார்.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் என்ற அடிப்படையில் அலிசாகிர் மௌலானாவுக்கு வழங்கப்பட்டிருந்த பொலிஸ் பாதுகாப்புடன் அவரது வீட்டில் கருணாவின் மனைவி தங்கியிருந்தார்.

அத்துடன், அலிசாகிர் மௌலானாவின் காரிலேயே கருணாவின் மனைவி கார் ஓட்டப்பழகியதாகவும் விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்ததாகவும் பி.பி.ஸி குறிப்பிட்டது.

# சிங்கப்பூர் பிரதமர் கொழும்புக்கு விஜயம்



சிங்கப்பூர் பிரதமர் கோ சொக் டொங் இரண்டுநாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு நேற்று பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு வந்தடைந்தார்.

அவருடன் 32 பேரைக் கொண்ட உயர்மட்டக் குழுவும் இலங்கை வந்தது. கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிங்கப்பூர் பிரதமரை பிரதி வெளியுறவு அமைச்சர் விஸ்வவர்ணபால வரவேற்றார்.

இதன்பின்னர் சிங்கப்பூர் பிரதமரை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினார்.

நேற்று ஜனாதிபதியைச் சந்தித்த சிங்கப்பூர் பிரதமர் இருதரப்பு உறவு குறித்து பேச்சு நடத்தினார்.

இந்தச் சந்திப்பின்போது அரசாங்கம் உரிய மானியங்களை வழங்காமையால் அண்மைக்காலத்தில் இலங்கையிலிருந்து வெளியேறும் நிலைக்கு உள்ளான பிரிமா நிறுவன விடயம் குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரியவருகிறது.

இனறு பிரதமர் மகிந்த ராஜபக்ஷவைச் சந்திக்கும் கோ சொக் டொங் எதிர்க்கட்சித் தலைவர் ரனில விக்கிரமசிங்கவையும் சந்திப்பார்.

பின்னர் கண்டிக்கும் அவர் விஜயம் செய்யவுள்ளார். இலங்கையில் சிங்கப்பூரின் முதலீடுகளை அதிகரிக்கும் நோக்கமாகவே ஜனாதிபதி சந்திரிகாவின் அழைப்பின்பேரில் கோ சொக் டொங்கின் இலங்கை விஜயம் அமைந்துள்ளது. (01)

# கருணாவுக்கு உதவியதால் ஐ.தே.க மீது சந்தேகம்!

## செல்வம் அடைக்கலநாதன் கூறுகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து நீக்கப்பட்ட கருணாவை பாதுகாப்பாக கொழும்பிற்கு அழைத்துச்சென்றதில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருப்பதானது அக்கட்சிமீதும் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பன் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சிங்கள நாளிதழான திவயினவிற்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான அலி சாகிர் மௌலானா செய்த செயலானது இன்று தமிழ், முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமைக்கு பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அடுத்துவரும் கலந்துரையாடலில் இது தொடர்பாக தீர்க்கமான முறையில் கலந்துரையாடித் தீர்மானம் எடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# ஹெல உறுமய எம்.பியின் தடையுத்தரவு மேலும் நீடிப்பு

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய நாடாளுமன்ற உறுப்பினர் சங்கைக்குரிய அக்மீமன தயாரத்ன தேரர் நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்வதையும், வாக்களிப்பதைத் தடுக்கும் உத்தரவு நீதிமன்றத்தினால் நீடிக்கப்படவுள்ளது.

சங்கைக்குரிய தேரரின் சார்பில் நீதிமன்றில் ஆஜராகிய சட்டத்தரணிகள் தடையுத்தரவை நீக்குமாறு கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தைக் கேட்டுள்ளனர்.

இந்தக் கோரிக்கையை நிராகரித்த நீதியரசர் எஸ்.எம்.எஸ்.சமரக்கோன் தடையுத்தரவை இந்த மாதம் 29 ஆம் திகதிவரை நீடித்தார்.

ஜாதிகஹெல உறுமய சார்பில் ஆஜரான சட்டத்தரணிகள் தடையுத்தரவை பிறப்பிப்பதற்கு மாவட்ட நீதிமன்றத்துக்கு அதிகாரம் கிடையாது என்று வாதிட்டனர். எனினும் இந்த வாதத்தைப் பரிசீலித்த நீதிபதி தடையுத்தரவை மேலும் நீடித்தார்.

# வவுனியா வளாக மாணவர்களால்...

இவர்களுக்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கமும் ஆதரவளித்து நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டது.

இதனையடுத்து நேற்று யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா சென்ற துணைவேந்தர் மோகனதாஸ் மாணவர்களுடனும், விரிவுரையாளர்களுடனும் பேச்சு நடத்தினார்.

பல்கலைக்கழக நிர்வாக அலுவலகதில் நடைபெற்ற இந்தப் பேச்சு மாலை 6.10 மணிக்கு ஆரம்பமாகியது. மாணவர்கள் முன்வைத்த ஏழு கோரிக்கைகளுக்கும் இந்தப் பேச்சுக்களின்போது இணக்கம் ஏற்படவில்லை.

மாணவர்களுக்கான மைதானம் அமைப்பதில் இணக்கப்பாடு ஏற்பட்ட போதும் ஏனையகோரிக்கைகளுக்கும் சாதகமான பதில் கிடைக்காததையடுத்து பேச்சுநடைபெற்ற நிர்வாகக் கட்டடத்தின் கதவை மூடி துணைவேந்தர் மோகனதாஸ் பீடாதிபதி மகேஸ்வரன் உட்பட மேலும் சகலரையும் மாணவர்கள் தடுத்து வைத்தனர்.

நேற்று நள்ளிரவுவரை பேச்சுக்கள் நடைபெற்றன. எனினும் இந்தச் செய்தி எழுதும்வரை இருவரும் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக மாணவர் ஒன்றியப்பிரதிநிதி ஒருவர் தெரிவித்தார். 250 இற்கும் மேற்பட்ட மாணவர்களும், அலுவலகத்தைச் சுற்றி மறியலில் ஈடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# விசேட தூதுவர் சொல்ஹெய்ம்...

கடி நிலையை சுமுகமாக்கும் நோக்குடன் இலங்கைவரும் எரிக் சொல்ஹெய்ம் - கிளிநொச்சியில் தமிழ்ச்செல்வனுடன் பேசப்பட்ட விடயங்கள் குறித்து பின்னர் அரச தரப்புக்கு தெரியப்படுத்துவார் எனவும் தெரியவருகிறது.

இதேவேளை - இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் புறாவ் ஹொவ்டே நாளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளார்.

கிளிநொச்சியிலுள்ள சமாதானச் செயலகத்தில் நாளை காலை 10.30 மணிக்கு இந்தச் சந்திப்பு இடம்பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது - போர் நிறுத்த உடன்பாட்டை நடைமுறைப் படுத்துவது தொடர்பான சிக்கல்கள், புலிகளின் கடற்போக்குவரத்து நெருக்கடிகள், மட்டக்களப்பு விவகாரம் மற்றும் கருணாவுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படுவதால்- இராணுவத்துடனான சந்திப்புக்களை புலிகள் நிறுத்தியிருப்பது உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஆராயப்படும் எனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.06.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.